Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 10 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, ஜுன் 4-10, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- | ஆண்டு சந்தா - ரூ.260/-

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

## கோடையை மறந்து ஜி.வி. பிரகாஷின்

# இசை மழையில் மகிழ்ந்த இரசிகர்கள்!





✍ தி கோவை மெயில்

கோவை எம்.கே. எண்டர்டெயின்மெண்ட், அன்னபூர்ணா மசாலா மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய, பிரபல இசை அமைப்பாளரும் நடிகருமான ஜி.வி. பிரகாஷின் "ஆயிரத்தில் ஒருவன்" நேரடி இசை நிகழ்ச்சி கொடிசியா மைதானத்தில் கடந்த மே 27, சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஜி.வி. பிரகாஷ், 2006ம் ஆண்டு 'வெயில்' திரைப்படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகி பொல்லாதவன், ஆயிரத்தில் ஒருவன், ராஜாராணி போன்ற வெற்றிப் படங்களுக்கு இசையமைத்ததுடன் 'வெயிலோடு விளையாடி', 'யாத்தே யாத்தே', 'உன் மேல ஆசைதான்' போன்ற பல ஹிட் பாடல்களையும் கொடுத்தவர்.

ஜி.வி. பிரகாஷின் 17 வருடகால இசைப்பயணத்தில் "ஆயிரத்தில் ஒருவன்" திரைப்படம், ஒரு மிகப்பெரிய மைல்கல்லாக அமைந்தது. அப்படத்தின் பாடல்கள் மற்றும் பின்னணி இசை இன்றளவும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனால் ஜி.வி.பிரகாஷின் முதல் நேரடி இசை நிகழ்விற்கு 'ஆயிரத்தில் ஒருவன்' எனப் பெயரிடப்பட்டதாகத் தெரிவித்தனர். இசையமைப்பாளர்கள் பலர் தங்களது நேரடி இசை நிகழ்வை வெளிநாடுகளில் நடத்திவரும் நிலையில், இவர் தனது முதல் இசை மழையை கோவையில் பொழிய செய்தது சிறப்பம்சமாகும்.

இந்த நேரடி இசை நிகழ்ச்சியில் ஜி.வி. பிரகாஷுடன் இணைந்து பிரபல பின்னணி பாடகர்களான ஸ்வேதா மோகன், ஹரிணி, சைந்தவி, திப்பு திவாகர், சத்ய பிரகாஷ், வேல்முருகன் மற்றும் பலர் பாடினர். இத்துடன், பிரபல



நடன இயக்குநர் சாண்டி குழுவினரின் நடன நிகழ்ச்சி இரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நிகழ்ச்சியில் இடம்பெற்ற பெரும்பாலான பாடல்கள் தமிழில் ரீராம்ப் வெர்ஷனில் பாடப்பட்டன.

இந்நிகழ்வில் ஜி.வி பிரகாஷ் பேசுகையில், "2006ல் தொடங்கி இதுவரை என் இசைப்பயணத்தில் நான் 98 பாடல்கள் இசைத்துள்ளேன். முதல் முறையாக கோவையில் இசை நிகழ்ச்சி நடத்துவது பெருமைக்குரிய விஷயம். பல பாடல்கள் இசைத்தலும் இதுபோன்ற நேரடி நிகழ்ச்சி நடத்த காத்திருந்தேன்", என்றார்.

முதல் நேரடி இசை நிகழ்ச்சி என்பதாலோ என்னவோ ஜி.வி. பிரகாஷ், அவருடைய முதல் படத்தின் முதல் பாடலான "வெயிலோடு விளையாடி" பாடலை நிகழ்வின் தொடக்கப் பாடலாக பாடினார். அதனைத் தொடர்ந்து சைந்தவி "விழிகளில் ஒரு வானவில்" பாடலைப் பாடியது இரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து அதிக மெலடி மற்றும் அதிரடி பாடல்கள் நிகழ்ச்சியை சுவாரஸ்யமாகக் கொண்டுசென்றது.



நிகழ்வில் திடீர் சிறப்பு வருகையாளராக நடிகர் ஆர்யா தோன்றி தனது நண்பனின் இசை நிகழ்ச்சிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, ஜி.வி. பிரகாஷின் இசையில் தனது படமான "காதர்பாட்ஷா" படத்தைப் பார்க்கக் கோரிக்கை விடுத்தார். திரை இயக்குநர் ஏ.எல். விஜய் தனது கிரீடம், மதராசப்பட்டினம், தெய்வத்திருமகள், தலைவா போன்ற படங்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். மேலும் இந்நிகழ்ச்சியில் கவிஞர் பா. விஜய், எம்.கே. என்டர்டெய்ன்மென்ட்ஸின் நிர்வாக இயக்குனர் மணிகண்டன், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் மலர்விழி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இரசிகர் கூட்டத்திற்கு நடுவே எல்.இ.டி. ஒளித்திரைகள், 7 மற்றும் 9 அடிகளில் அமைக்கப்பட்டிருந்தது அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது. ஏராளமான மக்கள் தங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் இசை நிகழ்ச்சியை மகிழ்வுடன் கண்டுகளித்தனர்.



# என் மனதை நான் எப்படிக் கட்டுப்படுத்துவது?

✍ தி கோவை மெயில்

கேள்வி: சத்குரு, என் மனம் தேவையில்லாததை எல்லாம் நினைக்கிறது. என் மனதை நான் எப்படிக் கட்டுப்படுத்துவது? குறிப்பாக தியானம் பழக வேண்டுமென்றால் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்களே?

சத்குரு: முதலில் உங்கள் மனதை ஏன் கட்டுப்படுத்த முயற்சிக்கிறீர்கள்? உங்கள் சிறு வயதிலிருந்தே, குறிப்பாக ஆன்மீகவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் "கெட்ட விஷயங்களை நினைக்கக்கூடாது. உங்கள் மனதை நீங்கள் கட்டுப்படுத்த பழகவேண்டும்" என்றெல்லாம் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் அப்படிச் செய்யும்போது மனம் அந்த விஷயங்களைத்தான் முழு நேரமும் நினைக்க ஆரம்பிக்கிறது. உங்கள் மனதின் செயலைப் பொறுத்தவரையில், வகுத்தல் கழித்தல் எல்லாம் கிடையாது. அங்கே கூட்டல், பெருக்கல் மட்டும்தான். உங்கள் மனதிலிருந்து அதிரடியாக ஒரு எண்ணத்தையாவது உங்களால் நீக்க முடியுமா? முடியவே முடியாது. இல்லையா?

ஏதாவது ஒன்றைக் குறித்து இன்று நினைக்கக்கூடாது என்று நீங்கள் முடிவு செய்தால் அன்று முழுவதும் அதுதான் நடக்கிறது. ஏதாவது ஒன்றைக் குறித்து இன்று நினைக்கக்கூடாது என்று நீங்கள் முடிவு செய்தால் அன்று முழுவதும் அதுதான் நடக்கிறது. நீங்கள் முயற்சித்துப் பாருங்கள். இன்று சிகப்பு நிறத்தைப் பற்றி சிந்திக்கக் கூடாது என்று முடிவு செய்யுங்கள். திடீரென்று உங்கள் அக்கம்பக்கம் எல்லாம் சிகப்பு நிறமாக இருப்பதைப் பார்க்கலாம். மனதின் அடிப்படைத் தன்மைகளை புரிந்து கொள்ளாமல் நாம் இப்படியே பலவாறு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

தியானத்தில் உட்காரும் போது, என் இதயம் துடிப்பதை நிறுத்த வேண்டும் என எண்ணுகிறீர்களா? என் சிறுநீரகம் தனது செயலை நிறுத்த வேண்டும் என எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா? கிடையாது. அவையெல்லாம் தமது செயலை தொடர்ந்து நடத்த அனுமதித்தீர்கள்தானே? பிறகு மனதையும் அது தனது வேலையைச் செய்ய ஏன் நீங்கள் அனுமதிக்கக்கூடாது? தியானம் செய்ய உட்காரும்போது மட்டும் மனம் நின்று விட வேண்டும் என நினைக்கிறீர்கள். இது மிகவும் தவறான அணுகுமுறை. மனதை கட்டுப்படுத்த வேண்டும் என்று மக்கள் எப்போதும் உங்களுக்கு சொல்லி வந்திருக்கிறார்கள். உங்களால் எப்போதும் அப்படி மனதைக் கட்டுப்படுத்த முடியாது. மற்றவர்கள் யாராவது தன் மனதைக் கட்டுப்படுத்தி இருக்கிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? யாரும் அப்படி செய்ததில்லை, தெரியுமா? இயல்பாகவே அப்படிச் செய்யவும் முடியாது.

இந்த மனம் ஒரு புழுவிலிருந்து, ஒரு பூச்சியிலிருந்து, ஒரு குரங்கிலிருந்து, தற்போது மனிதன் வரை இத்தகைய பரிணாம வளர்ச்சி அடைய இலட்சக்கணக்கான வருடங்கள் எடுத்திருக்கிறது. இவ்வளவு மகத்தான முயற்சிக்குப்பின் இத்தகைய மனம் உங்களுக்குக் கிடைத்திருக்கும்போது, அதை ஏன் கட்டுப்படுத்த முயற்சிக்கிறீர்கள்? அது முழுத் தீவிரத்துடன் இருக்கவேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். ஆனால் அற்புதமாக இருக்க வேண்டிய மனம் தற்போது உங்களுக்கு துன்பத்தை உற்பத்தி செய்கிற இயந்திரமாக மாறிவிட்டது.

உங்களுடைய அனைத்து துன்பங்களும் உங்கள் மனதில்தானே உற்பத்தியாகின்றன? அப்படியென்றால் அதை எப்படி இயக்குவது என்று உங்களுக்குத் தெரியவில்லை. இந்த மனதை வைத்து ஆனந்தம் எப்படி உற்பத்தி செய்வது என்று தெரிந்துவிட்டால் பிறகு அதை கட்டுப்படுத்த எண்ணுவீர்களா? ஒருபோதும் மாட்டீர்கள். எனவே உங்கள் மனதை எப்படி சரியாக இயக்கவேண்டும் என்பதைத்தான் நீங்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும்.

யோகாவில் உங்கள் மனதை கட்டுப்படுத்தத் தேவையில்லை. சில எளிமையான பயிற்சிகள் உள்ளன. அவற்றை கடைப்பிடித்தால் போதும். அப்போது 'நான்' என்னும் தன்மை, உங்கள் உடல், மனம் ஆகியவற்றிலிருந்து சிறிது விலகியிருப்பதை பார்க்கமுடியும். அந்த இடைவெளியை நீங்கள் உருவாக்கிவிட்டால், பிறகு உங்கள் துன்பங்கள் அனைத்தும் நிரந்தரமாக முடிவுக்கு வந்துவிடும்.



**"இந்த மனதை வைத்து ஆனந்தம் எப்படி உற்பத்தி செய்வது என்று தெரிந்துவிட்டால் பிறகு அதை கட்டுப்படுத்த எண்ணுவீர்களா? ஒருபோதும் மாட்டீர்கள். எனவே உங்கள் மனதை எப்படி சரியாக இயக்கவேண்டும் என்பதைத்தான் நீங்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும்."**

## கொங்குநாடு கல்லூரி சார்பில் தேனீக்கள் தின விழா



கொங்குநாடு கல்லூரியின் முன்னாள் மாணவரும் 'ஜி ஆனி' நிறுவன உரிமையாளருமான ஜினோ, தனக்கு வழங்கப்பட்ட சிறந்த தேனீ வளர்ப்பாளருக்கான தேசிய விருதை, தமிழக வேளாண்துறை அமைச்சர் பன்னீர் செல்வத்திடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.



உலக தேனீக்கள் தின நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

✍ தி கோவை மெயில்

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், கோவை வேளாண் அறிவியல் நிலையம், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி மற்றும் நல்லாம்ளையம், மருதம் தேனீ வளர்ப்பு பண்ணை ஆகியவை இணைந்து உலக தேனிக்கள் தினத்தை நல்லாம்பாளையத்தில் உள்ள மருதம் தேனீ வளர்ப்பு பண்ணையில் கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலையத்தின் மனையியல் துறை வல்லுனர் கோமதி, தேனீ வளர்ப்பில் வேளாண் அறிவியல் நிலையத்தின் பங்கு பற்றியும், முக்கியத்துவம் பற்றியும் விவசாய உற்பத்தியில் தேனீக்களின் பங்களிப்பை பற்றியும் விளக்கினார்.

இதில் கொங்குநாடு கலை கல்லூரி விலங்கியல் துறை உதவி பேராசிரியர் ராஜேஷ் குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு தேனீக்களின் வகைப்பாடுகள், அவற்றை பராமரிக்கும் முறைகள் பற்றியும், தேனீக்களுக்கு ஏற்படக்கூடிய நோய் மற்றும் மேலாண்மை பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். வேளாண் அறிவியல் நிலையத்தின் முன்னோடி தேனீ வளர்ப்பாளரான மணிகண்ட காளிதாஸ் தேனீ கூட்டங்கள் பராமரிப்பு பற்றி செயல் முறை விளக்கமும் தேனீ வளர்ப்பில் உள்ள இடர்பாடுகளை பற்றியும் விளக்கினார்.

கொங்குநாடு கலை கல்லூரியில் செயல்பட்டு வரும் டிப்ளமோ தேனீ வளர்ப்பு துறையில் பயின்ற முன்னாள் மாணவர் ஜினோ, தேசிய அளவில் சிறந்த தேனீ வளர்ப்பாளர் விருதினை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தூயதமிழ் பயிற்சிப் பட்டறை நிறைவு விழா

✍ தி கோவை மெயில்

தூயதமிழ் இளைஞர் பாசறை மற்றும் லயன்ஸ் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் மற்றும் சுப்பீரியர் கிங்ஸ் இணைந்து மே 10ம் நாள் முதல் 24ம் நாள் வரை கோவையில் பள்ளி மாணவ மாணவிகளுக்குப் பிழையின்றித் தமிழ் பேச, எழுத, படிப்பதற்கான சிறப்புப் பயிற்சியை நடத்தியது.

தூயதமிழ் பயிற்றுநர் தமிழ் மணிகண்டன் 30க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு 12 நாள்களும் தமிழை எளிமையாகக் கற்பித்தார். பட்டறையில் மாணவர்களிடையே பேச்சு, பரதம், சிலம்பம் போன்ற கலைகள் அடையாளப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் வகுப்பில் வாசித்தல் திறன், கவனித்தல் திறன், உற்று நோக்கல் திறன் மேம்பாடு, நற்பண்புகளை ஊக்குவித்தல் மற்றும் கையெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து வியாழக்கிழமை தூயதமிழ்ப் பயிற்சி பட்டறை நிறைவு விழா, தூயதமிழ் இளைஞர் பாசறையின் நான்காம் ஆண்டுத் தொடக்க விழா நூல் வெளியீடு மற்றும் மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா ஆகிய முப்பெரும் விழா மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

தூயதமிழ் இளைஞர் பாசறையின் அறிவுரைஞர் இராமாநுசன் தலைமையேற்று உரை நிகழ்த்தினார்.

தூயதமிழ் இளைஞர் பாசறையின் புரவலர் வெங்கடகிருட்டிணன் மற்றும் லயன்ஸ் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் சுப்பீரியர் கிங்ஸின் பட்டயச் செயலாளர் அருண்குமார் விழாவிற்கு முன்னிலை உரை வழங்கினர்.

## பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் கோவை செட்டிபாளையம் சாலையில் அமைந்துள்ள அமெரிக்க நிறுவனமான பேகர் ஹியூக்ஸ் (*Baker Hughes*) பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நிகழ்வில் நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியின் சார்பாக என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் செயலர் ராமசாமி, பேகர் ஹியூக்ஸ் நிறுவனத்தின் முதன்மை மேலாளர் அனந்த பத்மநாபன் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். கல்லூரியின் முதல்வர் அசோக் மற்றும் துறைத் தலைவர்களும் உடனிருந்தனர்.

மழை பெய்ய வேண்டி

## அரச மரத்திற்கும் வேப்ப மரத்திற்கும் திருமணம்

✍ தி கோவை மெயில்

மரங்களின் ராஜா என்று அழைக்கப்படும் அரச மரத்தை சிவ பெருமானாகவும், மரங்களின் ராணியான வேப்பமரத்தை அம்பாளாகவும், பக்தர்கள் பாவித்து, அரச, வேம்பு மரத்திற்கு திருக்கல்யாணம் செய்து வைத்து வருகின்றனர். அப்படி செய்வதன் மூலம் குறைவில்லா சந்தான பாக்கியமும், கன்னிகா தானம் செய்த பலனும் கிடைக்கும். அத்துடன் மாதம் மும்மாரி மழை பெய்யும்.

பெண்களுக்கு ஏற்படும் மாங்கல்ய தோஷம் நீங்கும் என்பது நம்பிக்கை. இப்பலன் அனைவருக்கும் சென்று சேர கோவை நேரு நகர் மேற்கு பகுதியில் உள்ள வள்ளி தெய்வானை சமேத



சண்முகநாதர் கோவிலில் அரச, வேம்பு திருக்கல்யாண நிகழ்ச்சியும், ஐம்பொன் விக்ரக

பிரதிஷ்டையும் நடந்தது.

கோவில் வளாகத்தில் உள்ள அரச வேம்பு மரத்தின் முன் வேள்விச்சாலை அமைத்து, வேதமந்திரங்கள் முழங்க மங்கல பொருட்கள் சமர்பித்து மஞ்சள் நாணை சிவாச்சாரியார்கள், பொதுமக்கள் அனைவரும் வேப்பமரத்திற்கு அணிவித்தனர்.

வேப்பமரத்தில் அணிவித்த மலர் மாலைகளை, அரசமரத்திற்கு மாற்றி அணிவித்தனர். தொடர்ந்து சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டு, தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்ததோடு, மொய் பணமும் எழுதினர்.

ஆஸ்திரேலியா சட்டமன்ற உறுப்பினர்களுக்கு

## கோவையில் செண்ட மேளம் முழங்க வரவேற்பு!

✍ தி கோவை மெயில்

கோவைக்கு வந்த வெஸ்டன் ஆஸ்திரேலியா சபாநாயகர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை கேரளா பாரம்பரிய செண்ட மேலத்துடன் வரவேற்றனர்.

மேற்கு ஆஸ்திரேலியா சட்டமன்றத்தின் சபாநாயகர் மைக்கில் ராபர்ட்ஸ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் டேவிட் ஹனி, டேவிட் மற்றும் இந்திய வம்சாவளி ஆஸ்திரேலியா சட்டமன்ற உறுப்பினர் ஜெகதீஷ் கிருஷ்ணன் ஆகியோர் சென்னையிலிருந்து விமானம் மூலம் கோவை வந்தடைந்தனர்.

இவர்கள் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் மாணவர்களுடன் கலந்துரையாடினர். இதைத்தொடர்ந்து கோத்தகிரியில் தேயிலை விவசாயம் சார்ந்த நிகழ்வு மற்றும் பழங்குடியின கலாச்சார நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றனர்.

இந்த நிலையில் கோவை விமான நிலையத்தில் ஆஸ்திரேலியா சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கேரள மாநிலத்தின் பாரம்பரிய செண்ட மேளம் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த இசை நிகழ்ச்சியை கண்டு களித்த ஆஸ்திரேலியா சட்டமன்ற உறுப்பினர்கள் கேரளா பாரம்பரியத்தை இசைத்து மகிழ்ந்தனர். இதில் பெண் சபாநாயகர் செண்ட மேளம் வாசிக்க, சட்டமன்ற உறுப்பினர் டேவிட் ஹனி, ஜால்ரா இசை கருவியை இசைத்தனர். உற்சாகமாக வாசித்த அவர்கள் தங்களின் மகிழ்ச்சியை உடல் அசைவுகளால் வெளிப்படுத்தினர்.

இதற்கு முன்னர் செய்தியாளர்களை சந்தித்த சட்டமன்ற உறுப்பினர் ஜெகதீஷ் கூறியதாவது, கலாச்சாரத்தை பற்றி தெரிந்து கொள்ளவும், இங்குள்ள கல்வித்தரம் அறியவும் தமிழகம் வந்துள்ளோம்.

கோவை மற்றும் கோத்தகிரியில் தனியார் கல்லூரிகளில் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. உலகம் முழுவதிலும் உள்ள இளைஞர்களுக்கு தேவையான அனைத்து விஷயங்களும் நம் நாட்டில் உள்ளன எனக் கூறினார்.

நம் நாட்டின் கல்வித்தரம் உயர வேண்டும் கல்வித்தரத்தில் வேறுபாடும் மாறுபாடும் இருக்க கூடாது எனவும்,

தமிழகத்திற்கும் வெஸ்ட் ஆஸ்திரேலியாவிற்கும் இடையேயான உறவைமேம்படுத்த வேண்டும் எனக் கூறிய அவர், நல்ல வேலை செய்பவர்களுக்கு எப்போதும் எங்கேயும் வேலை உண்டு என்றார்.

மேலும், கலாச்சாரம் சார்ந்த விஷயங்கள் தமிழகத்தில் மகிழ்வை அளிக்கிறது என்றும், 26 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை கல்வி வேலைவாய்ப்பு சார்ந்த நிகழ்வுகள்நடைபெற உள்ளன.

கல்வி மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த நாங்கள் எடுக்கும் முயற்சிக்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்குகிறது. அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் பி.டி.ஆர் உள்ளிட்ட தமிழக அரசியல் தலைவர்களை சந்தித்திருக்கிறோம் என்றார்.

உடன் மேற்கு ஆஸ்திரேலியா சட்டமன்றத்தின் சபாநாயகர் மைக்கில் ராபர்ட்ஸ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் டேவிட் ஹனி ஆகியோர் உடன் இருந்தனர்.



## புதிய விளம்பரப் பிரசாரத்தை துவங்கிய பிளேயர்ஸ்பாட்!


✍ தி கோவை மெயில்

இந்தியாவின் இணையவழி கேமிங் தளமான பிளேயர்ஸ்பாட் (*PlayerzPot*), திறன் சார்ந்த விளையாட்டுகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த பிளேயர்ஸ்பாட் தளம் தற்போது, *#TalentKiValue* என்ற தலைப்பில் புதிய விளம்பரப் பிரச்சாரத்தை துவங்கியுள்ளது.

இதற்கு நடிகை ராஷ்மிகா மந்தனா விளம்பரத் தூதராக நடித்துள்ளார். பிளேயர்ஸ்பாட் தளம் உள்ளரங்க கேமிங் சாம்பியன்களிடம், அவர்களுக்குப் பிடித்த கேம்களை மீண்டும் அறிமுகப்படுத்தி அங்கீகரித்து ஊக்குவிக்கிறது. இந்தப் புதிய விளம்பரப் பிரச்சாரம் பல்வேறு டிஜிட்டல் தளங்கள், ஒ.டி.டி. தளங்களில் ஒளிபரப்பாக உள்ளது. இந்த விளம்பரப் பிரச்சாரத்தின் மூலம், பிளேயர்ஸ்பாட் அனைத்து பிரிவு கேமர்கள் மத்தியிலும் பெரும் முன்னேற்றங்களை கண்டு வருகிறது.

### கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை சார்பில்

# கிராமப்புற மக்களுக்காக இலவச மருத்துவ முகாம்




கல்லீரல் பரிசோதனை கருவியை துவக்கி வைத்த அமைச்சர் முத்துசாமி. உடன் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை தலைவர் டாக்டர் நல்ல பழனிசாமி, செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி, கல்லீரல் நோய் சிறப்பு நிபுணர் டாக்டர் அருள்ராஜ்.

✍ தி கோவை மெயில்

கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை சார்பில், கிராமப்புற மக்களிடையே கல்லீரல் நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஈரோடு மாவட்டம் நல்லாம்பட்டி, கோவை தடாகம் மற்றும் வீரியம்பாளையம் ஆகிய மூன்று கிராமங்களில் கே.எம்.சி.ஹெச். இலவச மருத்துவ முகாமினை நடத்தி வருகிறது.

கே.எம்.சி.ஹெச். மருத்துவர்கள் 5 ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கு முகாமிட்டு கிராமப்புற மக்களுக்கு தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கி வருகின்றனர். இந்த முகாம்களில் இரத்தப் பரிசோதனை, ஸ்கேன் உள்ளிட்ட அனைத்து பரிசோதனைகளும் செய்யப்படுகின்றன.

மேலும் கிராமத்தில் இருந்து சிகிச்சை பெற நகருக்கு வர இயலாத மக்களுக்காக சுமார் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள அதிநவீன கல்லீரல் பரிசோதனைக் கருவியை மக்கள் பயன்பெறும் வகையில் பிரான்ஸ் நாட்டிலிருந்து கே.எம்.சி.ஹெச். இறக்குமதி செய்துள்ளது.

இதனை தமிழக நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் முத்துசாமி, மக்கள் சேவைக்கு ஞாயிற்றுகிழமை துவக்கிவைத்தார். இதில் கே.எம்.சி.ஹெச். தலைவர் டாக்டர் நல்ல பழனிசாமி மற்றும் செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி முன்னிலை வகித்தனர். கே.எம்.சி.ஹெச். கல்லீரல் நோய் சிறப்பு நிபுணர் டாக்டர் அருள்ராஜ் உடனிருந்தார்.

இது குறித்து கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையின் தலைவர் பேசுகையில், நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். கிராம மக்கள் ஆரோக்கியம் என்பது எனது நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமானது. முன்பைவிட தற்போதைய காலகட்டத்தில் கிராமப்புற மக்களும் வாழ்க்கைமுறை சார்ந்த நோய்களால் பாதிப்படைகின்றனர் என்பது கவலை அளிக்கும் விஷயம்தான். ஆயினும் நவீன மருத்துவ வசதிகள் நம்பிக்கை அளிப்பதாய் உள்ளன. மக்கள் தொடர்ந்து மருத்துவ முகாம்களில் கலந்துகொண்டு தங்களது ஆரோக்கியத்தை காத்துக்கொள்ள வேண்டும். எனக் கூறினார்.

இந்நிகழ்வில் கே.எம்.சி.ஹெச். கல்லீரல் துறை மருத்துவர்கள் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் திரளான அளவில் கலந்துகொண்டனர்.

# எஸ்.என்.எஸ். கல்வியியல் கல்லூரியில் ஆண்டு விழா




எஸ்.என்.எஸ். கல்வியியல் கல்லூரியில் சிறந்த மாணவிக்கு விருது வழங்கிய போது எடுத்துக்கொண்ட குழு புகைப்படம். அருகில் சிறப்பு விருந்தினர் தலைமை வன பாதுகாவலர் செந்தில்குமார், எஸ்.என்.எஸ். கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்ப இயக்குனர் நளின் விமல் குமார், கல்லூரியில் முதல்வர் மேரி நோய லீனா ஆகியோர் உள்ளனர்.

✍ தி கோவை மெயில்

டாக்டர் எஸ்.என்.எஸ். கல்வியியல் கல்லூரியில் 16வது ஆண்டு விழா புதன்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தலைமை வன பாதுகாவலர் செந்தில்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

நிகழ்வின் துவக்கத்தில், சிறப்பு விருந்தினர் செந்தில்குமார், எஸ்.என். எஸ். கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்ப இயக்குனர் நளின் விமல் குமார் மற்றும் எஸ்.என்.எஸ். கல்வியியல் கல்லூரியில் முதல்வர் மேரி நோய லீனா ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி நிகழ்வினை துவக்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, கல்லூரி முதல்வர் மேரி நோய லீனா கல்லூரியின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். பின்னர், நளின் விமல் குமார் தலைமை உரையாற்றினார். அதில், மாணவ ஆசிரியர்கள் தங்களின் கற்றல் கற்பித்தல் திறனை இன்றைய தொழில்நுட்ப உலகுக்கு ஏற்ப புதுமையான முறையில் மேற்கொள்ளவும் மகிழ்ச்சியான கற்றல் சூழலை உருவாக்கிக் கொள்ளுமாறும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் செந்தில்குமார் பேசுகையில், இன்றைய நவீன யுகத்திற்கு தகுந்தார் போல் கற்றலில் புதுமையை ஏற்படுத்தி கற்பிக்குமாறும், மேலைநாட்டு கற்பித்தலுக்கும் நம் நாட்டு கற்பித்தலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விளக்கினார்.

இவ்விழாவின் அடுத்த கட்ட நிகழ்ச்சியாக விளையாட்டு மற்றும் மன்ற செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்ட மாணவ மாணவிகளுக்கு பாராட்டுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும், எஸ்.என். எஸ். கல்வியியல் கல்லூரியில் சிறந்த மாணவராக இரண்டாம் ஆண்டு மாணவி ஷிபானி மற்றும் அனைத்திலும் தனித் திறமையுடன் விளங்கிய முதலாம் ஆண்டு மாணவி மோனிஷா ஆகியோருக்கும் எஸ்.என். எஸ். கல்வி நிறுவனத்தின் சார்பாக விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

### கே.பி.ஆர். பொறியியல் கல்லூரி சார்பில்

# மழை அளவீட்டுக் கருவி வழங்கல்

✍ தி கோவை மெயில்

கோவை கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் செயல்படும் பிரதமரின் ‘உன்னத் பாரத் அபியான்’ பிரிவின் சார்பாக கே.பி.ஆர். கல்லூரி தத்து எடுக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றான காடுவெட்டிபாளையத்தில், ஸ்மார்ட் மழை அளவீட்டு கருவி பொருத்தப்பட்டது.

உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் நீர் மேலாண்மை கொள்கையின் கீழ் கே.பி.ஆர். பொறியியல் கல்லூரியின் சிவில் கட்டுமானத் துறை சார்பில் நிறுவப்பட்டுள்ள இந்த புது வகை மழை அளவீட்டு கருவி மழை நேரங்களில் பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை, மழை அளவை செல்போன் மூலம் தெரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கே.பி.ஆர். கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் திட்ட ஒருங்கிணைப்பாளர் சரவணன், கருவியை வடிவமைத்த சிவில் கட்டுமானத் துறை பேராசிரியை மீனாட்சி மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கருவியின் மூலம் மழை அளவு கணக்கீடு, மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மை ஆகியவை மேம்படும் என கே.பி.ஆர். பொறியியல் கல்லூரி முதல்வர் அகிலா தெரிவித்தார். இந்தத் திட்டம் கல்லூரி முதல்வர் அகிலா வழிகாட்டுதலில் நடைபெற்றது.




மழை அளவீட்டு கருவியை காடுவெட்டிபாளையம் ஊராட்சி மன்ற உறுப்பினர்களிடம் வழங்கிய கே.பி.ஆர். பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள்.

### கோவையில் தி.மு.க அரசைக் கண்டித்து

# அதிமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டம்!



கண்டன ஆர்பாட்டத்தில் பங்கேற்ற வடக்கு சட்டமன்ற உறுப்பினருமான அம்மன் கே அர்ஜுனன், சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராமன், அதிமுக தொண்டர்கள்.

✍ தி கோவை மெயில்

திமுக ஆட்சியில் கள்ளச்சாராய சாவு, போதை பொருட்கள் புழக்கம், சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளை கண்டித்து கோவையில் அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதிமுக கோவை மாநகர மாவட்ட கழகத்தின் சார்பில் கோவை தெற்கு தாசில்தார் அலுவலகம் முன்பு திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோவை மாநகர மாவட்ட செயலாளரும் வடக்கு சட்டமன்ற உறுப்பினருமான அம்மன் கே அர்ஜுனன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திமுக அரசை கண்டித்தும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் செந்தில் பாலாஜியை கண்டித்தும் கோஷம் எழுப்பினர்.



திமுக ஆட்சியில் நிலவும் கள்ளச்சாராய சாவு, போதை பொருட்கள் புழக்கம், சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அதிமுகவினர் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர். ஜெயராமன், முன்னாள் அமைச்சர் வேலுச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# நரசிம்மர் ஜெயந்தி திருவிழா



கோவை உக்கடம் லட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலில் நரசிம்மர் ஜெயந்தி திருவிழா வியாழக்கிழமை தொடங்கப்பட்டு, மூன்று நாட்கள் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்த திருவிழாவில் லட்சுமி நரசிம்மருக்கு ஹோமங்கள், அன்னாபிஷேகம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது. நிறைவு நாளில் சிறப்பு பூஜைகளும், லட்சுமி நரசிம்மன் திவ்ய தம்பதிகளுக்கு திருக்கல்யாண திருவீதி உலா மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றன. இதில் பக்தர்கள் பலர் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

### தீத்தடுப்பு பாதுகாப்பு கருவிகள் நிறுவனமான

# ஏ.பி.சி. பயர் இன்டியா கோவையில் துவக்கம்!

✍ தி கோவை மெயில்

தீதடுப்பு மற்றும் பாதுகாப்பு கருவிகளை மக்களுக்கு அளிப்பதில் முன்னணியில் இருக்கும் ஏ.பி.சி. பயர் இன்டியா, புதிய சூப்பர் மார்க்கெட் ஒன்றை தமிழ்நாட்டில் முதல் முறையாக கோவையில் காந்திபுரம், டாக்டர் நஞ்சப்பா சாலையில் திங்கட்கிழமை துவக்கியுள்ளது.



புதிய சூப்பர் மார்க்கெட்டை செல்வம் ஏஜென்சீஸ் உரிமையாளர் நந்தக்குமார் துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் ஏபிசி பயர் இன்டியா உரிமையாளர் லாரன்ஸ், பிபி அசோஷியேட்ஸ் சுப்ரமணியன் ஆகியோர் உள்ளனர்.

இந்நிகழ்விற்கு இந்திய தொழில் வர்த்தகசபை கோவை கிளையின் முன்னாள் தலைவரும், செல்வம் ஏஜென்சீஸ் உரிமையாளருமான நந்தக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு புதிய சூப்பர் மார்க்கெட்டை துவக்கி வைத்தார்.

இதில், முதல் விற்பனையை சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் பிரைவேட் லிமிடெட் துணைத்தலைவர் திருமூர்த்தி தொடங்கி வைத்தார். தீயணைப்பு கருவியை அகர்வால் ஸ்வீட் பேலஸ் உத்கரஸ் அகர்வால் பெற்றுக் கொண்டார். அடுக்கு மாடி குடியிருப்புக்கான முதல் ஹைட்ரன்ட் கருவியை, கிரடாய் அமைப்பின் கோவை கிளை துணைத்தலைவர் அபிஷேக் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் பேசிய ஏபிசி பயர் இன்டியா உரிமையாளர் லாரன்ஸ், பேசும்போது ; “இந்த புதிய சூப்பர் மார்க்கெட்டில் பல அதிநவீன புதிய கருவிகள் அறிமுகம் செய்துள்ளோம். அதுமட்டுமின்றி, இங்குள்ள ஒவ்வொரு கருவிகளின் செயல்பாடுகளை அறியவும் மற்றும் அனுபவமும் பெற முடியும். மேலும், திறன்வாய்ந்த உயர்ந்த செயல்திறனுடைய “இம்பேக்டர்” என்ற புதிய பிராண்டு தீயணைப்பு கருவிகளை அறிமுகம் செய்துள்ளோம். எங்கள் நிறுவனத்தில் மக்களுக்கு தீ தடுப்பு, பாதுகாப்பு பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்கப்படும். அனைத்து நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு எங்களது பயிற்சி மற்றும் கருவிகளை வழங்குகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

சிறப்பு விருந்தினர் நந்தகுமார் பேசுகையில், இத்தகைய தீ தடுப்பு நிறுவனத்தை துவக்கிவைப்பது மிகவும் பெருமையாக உள்ளது என்றார்.

மேலும், துவக்க விழாவில், பிபி அசோஷியேட்ஸ் சுப்ரமணியன், கிரடாய் தலைவர் குகன் இளங்கோ, ஜூபிலன்ட் தலைவர் அபுதாஹீர், இந்திய பிளம்பிங் சங்கத்தின் கோவை கிளை தலைவர் பிரகாஷ் கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தி கோவை மெயில்




# தீராத 'வலிக்கு' வழி உண்டு!

## கே.ஜி.மருத்துவமனையில் புதிய தொழில்நுட்பத்துடன் சிகிச்சை

✍ தி கோவை மெயில்

நம் உடலில் காயங்கள் அல்லது வியாதிகளால் சில நேரங்களில் அதீத வலி ஏற்படக்கூடும். நாள்பட்ட தீராத வயிற்றுவலி, மூட்டு வலி, தலைவலி உள்ளிட்ட பிரச்னைகளால் தற்கொலை செய்து கொள்பவர்கள் ஏராளம். வலியால் உயிரை மாய்த்துக் கொண்டதாக கோவை மாநகரப் பகுதியில் மட்டும் மாதந்தோறும் 10க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகின்றன.

இந்த வலிகளைக் குறித்தும் இதற்கான நிவாரண வழிகளைக் குறித்தும் இந்த வார மருத்துவ விழிப்புணர்வுத் தகவலையும் கே.ஜி. மருத்துவமனையில் செயல்படும் வலி நிவாரண மையம் குறித்தும் விளக்குகிறார் மருத்துவமனையின் தலைவர் கே.ஜி.பக்தவத்சலம்:

'நோய் என்பது வலியை உண்டாக்குகிறது. வலி என்பது நோயைக் குறித்து நாம் விழிப்புணர்வு அடைய கடவுள் கொடுக்கும் அறிகுறி எனலாம். நமது உடலில் ஏதோ ஒரு பிரச்னை அல்லது உடல் பாகங்களில் ஏதோ ஒன்று சரி இல்லை என்பதைத்தான் வலி நமக்கு உணர்த்துகிறது. 'ஏ சிம்ப்டமேட்டிக் ஹார்ட் அட்டாக்' போன்ற மாரடைப்புகளும் இன்னபிற வியாதிகளும் வலி இல்லாமலே ஏற்படும்.

உடலில் வலி ஏற்பட்டால், அதற்கு ஓய்வு எடுப்பது மற்றும் மருந்துகள் உட்கொள்வதை நாம் ஒரு நிவாரண வழிமுறையாகக் கையாள்கிறோம். கணையத்தில் கல் இருந்தாலும் மிக அதிகமான வலி ஏற்படும். சிறுநீரகக் கல், பித்தப்பையில் கல் உள்ளிட்ட பிரச்னைகளும் வலியை ஏற்படுத்தக் கூடியவையே. வயிற்று வலியும் தலைவலியும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள். இந்த உண்மையை உயிர் வரை உணர்ந்தவர்களே தனது உயிரையும் மாய்த்துக்கொள்ளத் துணிகின்றனர். இந்த உயிர் போகும் வலியைக் குறைத்து குணப்படுத்தும் வித்தையைக் கற்றுத் தெளிந்தவர்தான் சிறந்த மருத்துவர்.

பல்வேறு நோய்களை குணமாக்க நமது கோவையில் ஏராளமான மருத்துவர்கள் உள்ளனர். ஆனால் தீராத வலிகளைக் குணப்படுத்த இங்கே நான்கு சிறந்த மருத்துவர்களே உள்ளனர். அவர்களில் ஒருவர், வலியைக் குணப்படுத்தும் நிபுணத்துவம் பெற்ற நமது கே.ஜி. மருத்துவமனை மருத்துவர் செந்தில்குமார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன், மருத்துவர் மோகன்காந்தியும் சிறந்தவர்.

எங்கள் மருத்துவமனைக்கு, விபத்து அல்லது நோய் மூலமாக ஏற்படும் வலியுடன் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு முதலில் மருத்துவர் செந்தில்குமார் உடனடியாக சிகிச்சை அளித்து, வலியைக் கட்டுப்படுத்துகிறார். அதன்பின்னரே மற்ற சிகிச்சைகள் துவங்கும்.

பொதுமக்களுக்கு நாங்கள் சொல்வது என்னவென்றால், எங்கள் கே.ஜி. மருத்துவமனையில் சிறந்த வலி நிவாரணி மையம் செயல்படுகிறது. எனவே, உங்கள் உடலில் தீராத வலி ஏற்பட்டால், அரிய மானிட இன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் தவறான முடிவுகளை எடுக்க வேண்டாம். எங்கள் கே.ஜி. மருத்துவமனைக்கு வாருங்கள். உங்களுக்காக உதவி செய்யக் காத்திருக்கும் எங்களிடம் உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளுங்கள். நோயும் வலியும் இல்லா நல்வாழ்வைத் துவக்குங்கள்' என்றார்.

மேலும் தகவல்களுக்கு *0422 222 2222, 98422 66630.*

**டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம், தலைவர், கே.ஜி. மருத்துவமனை**

## நீண்ட நாள்பட்ட வலிகள் நிமிடத்தில் மறையும்

**டாக்டர் செந்தில்குமார், க்ரானிக்கல் பெயின் ஸ்பெஷலிஸ்ட்**

கே.ஜி. மருத்துவமனையில் 'கிரானிக்கல் பெயின் ஸ்பெஷலிஸ்ட்' டாக்டர் செந்தில்குமார் நீண்ட நாள்பட்ட வலிகள் குறித்து கூறியதாவது,

'வலிகளில் பல வகை உண்டு. எலும்பு, நரம்பு, தசைப் பிடிப்பு, மூட்டுகளில் வலி போன்றவை மூன்று மாதங்களில் இருந்து லேசாகத் தொடங்கி 10 வருடங்கள் வரை நிரந்தரமாக நோயாளியை விட்டுப் பிரியாமல் தொடர்ந்துகொண்டே இருக்கும். இதனால் மக்கள் பல்வேறு விதமான பிரச்னைக்கு ஆளாவார்கள். இதுவரை இந்த நீண்ட நாள் வலிகளுக்குத் தீர்வு இல்லாமலே இருந்தது. இந்நிலையில், கடந்த 10 முதல் 15 வருடங்களுக்குள் இதற்கான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதுடன், நவீன சிகிச்சைகளும் வந்துள்ளன.

நாள்பட்ட மூட்டு, இடுப்பு வலியால் நடக்ககூட முடியாத நிலையில் மருத்துவமனைக்கு வீல் சேரில் வருபவர்கள் மற்றும் கால் முழங்கால், இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் கூட வலி நிவாரண மருந்துகள் செலுத்தும் அதி நவீன கருவிகள் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின் மிக இயல்பாக நடந்து வீட்டுக்கு செல்கிறார்கள்.

இதற்கான அதிநவீன மருத்துவ சிகிச்சை முறைகள், மருந்துகள் வலி நிவாரண சிகிச்சையில் தற்போது வந்துள்ளன. 50 முதல் 80 வயது உள்ளவர்கள் ஆபரேஷன் செய்வதற்குத் தயங்குவார்கள். அப்படி இல்லை என்றால், அவர்களுக்குப் பல நோய்கள் உடலில் இருக்கும். அதனால் அவர்களுக்கு அனைத்துப் பரிசோதனைகளும் எடுக்கப்பட்டு சிகிச்சை அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.







இதனால் ஏற்படும் வலி காரணமாக மக்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாவார்கள். ஒருவரது இயல்பான எண்ணங்களை மாற்றும், தூக்கத்தைக் கெடுக்கும், கோபம், மனச்சோர்வு போன்ற தொந்தரவுகள் ஏற்படும்.

நாள்பட்ட வலிக்கும் சாதாரண வலிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒருவருக்கு காலில் அடிபட்டால் சிகிச்சை எடுத்த பின்பு அந்த இடத்தில் வரக்கூடிய வலி சாதாரணமானது. கிரானிக்கல் பெயின் என்பது காயமோ அடியோ ஏற்படாமல் தொடர்ந்து உடலின் ஒரு பகுதியில் வலி இருந்துகொண்டே இருக்கும்.

இதைவிட மிகவும் மோசமானது, ***suicide tendency*** வலி ஆகும். இது, தொடர்ந்து ஏற்படும் வலியின் இன்னல்கள் காரணமாக ஒருவருக்குத் தற்கொலை செய்யும் எண்ணத்தைத் தூண்டும். அந்த அளவிற்கு இந்த வலி தொடர்ந்துகொண்டே இருக்கும்.

எனவே, இதுபோன்ற வலி உள்ளவர்களுக்கு எக்ஸ்ரே, ஸ்கேன் போன்றவற்றை எடுத்துப் பார்த்து, பின்னர் அவர்களுக்கு எந்தப் பகுதியில் வலி இருக்கிறதோ அந்தப் பகுதியில் ***PRP (Platelet-Rich Plasma)*** எனும் பரிசோதனை செய்யப்படும். இந்த பரிசோதனை மூலம், அவர்களுடைய இரத்தத்தை எடுத்து, சிவப்பு இரத்த அணுக்களை வெள்ளை இரத்த அணுக்கள் மற்றும் பிளேட்லெட்டுகளிலிருந்து பிரித்த பின்பு, அந்த பிளேட்லெட் மீண்டும் ஊசி மூலமாக வலியுள்ள இடத்தில் செலுத்தும்பொழுது அவர்களுக்குப் பூரண வலி நிவாரணம் ஏற்படுகிறது.



எப்படியெனில், ஊசி செலுத்தும்போது அவர்களுக்கு அந்தப் பகுதியில் புதிய செல்கள் உருவாகிறது. அதனால் அவர்கள் குணமடைகின்றனர். தோள்பட்டை மற்றும் முதுகுத் தண்டுவடத்தில் ஏற்படக்கூடிய வலிகளுக்கும் எளிமையான மருத்துவம் உள்ளது.

எந்தப் பகுதியில் வலி இருக்கிறதோ அதே பகுதியில் ஊசி மூலமாக மருந்து செலுத்தி வலியைக் குணப்படுத்தலாம். அதனால் நீண்ட நாள் வலிகள் இருப்பவர்கள், நமக்கு நிரந்தரத் தீர்வு இல்லையே என வருந்தத் தேவையில்லை. உங்கள் எல்லா வலிகளுக்கும் தீர்வு கே.ஜி. மருத்துவமனையில் கிடைக்கிறது.

வலி நிவாரண சிகிச்சை என்பது உடல் உறுப்புகளில் ஏற்படும் நாள்பட்ட வலிகளுக்கு மட்டும் அல்ல. மிக சவாலான அறுவைசிகிச்சைக்குப் பிறகு நோயாளியின் மன பயத்தைப் போக்கி இயன்முறை மருத்துவம் செய்துகொள்ள உதவும் வகையில் வலி நிவாரண சிகிச்சையானது, தற்போதைய நவீன மருத்துவத்தில் ஒரு இணை உதவி மருத்துவமாகப் பயன்படுத்தப்படுகிறது.

"வலி இல்லாத வாழ்வு என்பது வரம்... அதைத் தருவதே கே.ஜி. மருத்துவ வலி நிவாரண மையத்தின் தரம்" என்ற நோக்கத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு, கே.ஜி. மருத்துவ மையத்தின் தலைவர் பத்மஸ்ரீ Dr. GB அவர்கள் வழிகாட்டுதலோடு வலி நிவாரண மருத்துவ மைய சிறப்பு மருத்துவர் தலைமையிலான குழுவினர் மக்களுக்குத் தன்னலமற்ற சேவையை செய்து வருகிறார்கள்' என்றார்.

## சைனஸ், காது வலிக்கு சிறப்பான சிகிச்சை

**டாக்டர் கே.பாலகிருஷ்ணன், காது, மூக்கு, தொண்டை அறுவைசிகிச்சை நிபுணர்**

காது, மூக்கு, தொண்டை மற்றும் கழுத்தின் மருத்துவ நிலைகளில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர் ஓட்டோலரிஞ்ஜாலஜிஸ்ட் அல்லது இ.என்.டி. *(ENT)* மருத்துவர் ஆவார். உடல் சமநிலைக் கோளாறுகள், தூக்கப் பிரச்னைகள், திடீர் காது கேளாமை, அதிக சத்த பாதிப்பு, நரம்பு வலி, நாள்பட்ட சைனசிடிஸ், ஒற்றைத் தலைவலி, முகத்தில் ஏற்படும் மின்னல் வலி, மெனியர்ஸ் நோய் போன்ற சுற்றோட்ட உள்காது பிரச்னைகள் மற்றும் பிற நரம்பியல் பிரச்னைகளுக்கும் இவர்கள் சிகிச்சை அளிப்பார்கள்.

வாழ்க்கையை மிகவும் வளமானதாகவும் அற்புதமாகவும் ஆக்கும் சில அடிப்படை செயல்பாடுகள் கேட்பது, பார்ப்பது ஆகும். இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை முறையான வழியில் செயல்படவில்லை என்றால் என்ன செய்வது என்பது குறித்து காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் கே.பாலகிருஷ்ணன் கூறியதாவது, 'இ.என்.டி. சார்ந்து பல முக வலிகள் வரும். திடீர் முக வலி (அக்கியூட் ஆன்செட்), சில நாட்களாக அல்லது ஒரு வாரமாக திடீரென முகத்தில் வலி இருக்கிறது என்றால் சைனசைடிஸ் (சைனஸ்) ஆகும். சைனசைடிஸ் என்பது உங்கள் சைனஸில் உள்ள திசுக்களின் அலர்ஜியாகும். உங்கள் நெற்றி, கன்னங்கள் மற்றும் மூக்கில் உள்ள இடைவெளிகள் காற்றினால் நிரப்பப்பட்டு அடைப்பு ஏற்படும்போது முக வலி, சளிப் பிடித்தல், மூக்கில் சளி வருதல், தும்மல், தொண்டை வலி, காய்ச்சல், தலை மற்றும் கண் வலி போன்றவை ஏற்படும்.

இ.என்.டி. பரிசோதனை, நாசி பரிசோதனை செய்து மூக்கில் எண்டோஸ்கோப்பி மூலம் சதை வளர்ச்சி அல்லது கட்டிகள் இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து அதற்கு ஏற்ப சிகிச்சை மேற்கொள்ளப்படும். சைனஸுக்கு பொதுவாக சி.டி. ஸ்கேன் எடுக்கப்படும். அதன் பின்னரே அறுவை சிகிச்சையா அல்லது மருந்துகளில் குணப்படுத்த முடியுமா என்பது முடிவு செய்யப்படும்.

கோவிட் காலகட்டத்தில் பெரும்பாலான கோவிட் நோயாளிகளுக்கு ம்யூக்கார் மைக்கோசிஸ் எனப்படும் பூஞ்சைக் காளான் தொற்று முகத்தில் காணப்பட்டன. இதுவும் ஒரு வகையான சைனசைடிஸ் ஆகும். மேலும் இவ்வகையான தொற்று ஏற்பட்டால் முக வலி, நரம்புகளைப் பாதித்து முகம் மரத்துப் போவது போன்றவை உண்டாகும். எந்த ஒரு சைனசைடிஸ்க்கும் சரியான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளாமல் போனால் அது கண்களுக்கும் மூளைக்கும் பரவக்கூடும். அதிர்ஷ்டவசமாக, இது ஒரு சதவீதம் மக்களுக்கு மட்டுமே ஏற்படும்.

இந்நோய், 10 ல் 8 பேருக்கு மருந்துகளின் மூலமாகவே குணமாகிவிடும். சிலருக்கு மட்டுமே அறுவைசிகிச்சை செய்யப்படும். எனவே இந்த மாதிரியான சூழல் ஏற்பட்டால் உடனடியாக இ.என்.டி. மருத்துவரை அணுகவும்.

அடுத்து, மற்றொரு வகையான முக வலி *Atypical facial pain (AFP)* ஆகும். இந்த வித்தியாசமான முக வலி, உங்கள் முகம் அல்லது வாயில் ஏற்படும் நாள்பட்ட வலியாகும். இது தொடர்ச்சியான இடியோபாத்திக் முக வலி *(PIFP)* என்றும் அழைக்கப்படுகிறது. எப்பொழுதும் இருக்கும் வலியைவிட வித்தியாசமாக இருப்பதனால் இதை வித்தியாசமான முக வலி எனக் கூறுகிறோம். இது ஒரு வகையான ஒற்றைத் தலைவலியின் மாறுபாடாகும். அக்கியூட் ஆன்செட் மற்றும் எடிபிக்கல் பேஷியல் பெயின் ஆகிய இரண்டும் முக வலியின் இரு பிரிவுகளாகும்.

அடுத்தது, காது தொற்று அல்லது அலர்ஜி. இது, பொதுவாக பாக்டீரியா அல்லது வைரஸ்களால் ஏற்படுகிறது. குறிப்பாக, குழந்தைகளுக்கு மற்ற காரணங்களில் ஒவ்வாமை, சைனஸ் நோய்த்தொற்றுகள், பல் நோய்த்தொற்றுகள், காது மெழுகு அதிகரிப்பு, உயர மாற்றங்கள் மற்றும் டெம்போரோமாண்டிபுலர் மூட்டு *(TMJ)* நோய்க்குறி ஆகியவை அடங்கும். காது வலியானது அக்கியூட் இயர் இன்பெக்சன் மற்றும் க்ரானிக் இன்பெக்சன் என இரு மாறுபாடுகளில் வரும். காதில் வெளிப்புறக் காது, நடுத்தரக் காது, உள் காது என மூன்று பிரிவுகள் உண்டு.

வெளிப்புற காது தொற்று அலர்ஜி *(Ottitis Externa)* அல்லது சிவத்தல் மற்றும் வீக்கம்) ஏற்படுத்தும் ஒரு நிலை. இது வெளிப்புற காது மற்றும் செவிப்பறைக்கு இடையில் உள்ள குழாய் ஆகும். ஓட்டிஸ் எக்ஸ்டெர்னா பெரும்பாலும் "நீச்சல் காது" என்று குறிப்பிடப்படுகிறது. ஏனெனில் மீண்டும் மீண்டும் காதில் தண்ணீர் வெளிப்படுவது, காது வலியை வீக்கத்திற்கு ஆளாக்கும்.

காது நோய்த்தொற்று *(Otitis Media)* என்பது காதுகளின் சிறிய அதிர்வுறும் எலும்புகளைக் கொண்ட செவிப்பறைக்குப் பின்னால் காற்று நிரப்பப்பட்ட இடமான நடுத்தரக் காதில் ஏற்படும் தொற்று ஆகும். பெரியவர்களைவிட குழந்தைகளுக்கு நடுத்தரக் காது தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். காது நோய்த்தொற்றுகள் பெரும்பாலும் தானாகவே சரிசெய்யப்படுவதால், வலியை நிர்வகித்தல் மற்றும் சிக்கலைக் கண்காணிப்பதன் மூலம் சிகிச்சை தொடங்கும். சில நேரங்களில், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் தொற்றுநோயை அழிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

உள்காது தொற்று அல்லது அலர்ஜி *(Otitis Interna)* என்பது, உள் காது நோய்த் தொற்றுகளைக் குறிக்கும். இதன் முக்கிய இரண்டு வகைகள் லேபிரிந்திடிஸ் மற்றும் வெஸ்டிபுலர் நியூரிடிஸ் ஆகும். இந்த இரண்டு உள் காது நோய்த்தொற்றுகளும் தலைச்சுற்றல் மற்றும் குமட்டல் உட்பட பல அறிகுறிகளை ஏற்படுத்தும். லாபிரிந்திடிஸ் உங்கள் காதுக்குள் ஆழமான, ஒரு நுட்பமான கட்டமைப்பை ஏற்படுத்துகிறது. இது லேபிரிந்த் என்று அழைக்கப்படுகிறது. லேபிரிந்திடிஸ் உள்ள ஒரு நபர் கேட்கும் பிரச்னைகளையும் சந்திக்கலாம்.



இவ்வாறான பிரச்னைகளை சந்திப்பவர்கள் எங்கள் கே.ஜி. மருத்துவமனைக்கு வாருங்கள். நாங்கள் எங்களது மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் திறமையான மருத்துவக் குழுவை கொண்டு உங்களது பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு கண்டு சிகிச்சை அளிக்கின்றோம்' என்றார்.

## தலை வலியைப் போக்க சில ஆலோசனைகள்!

**டாக்டர் ராமகிருஷ்ணன், நரம்பியல் நிபுணர்**

கே.ஜி மருத்துவமனையின் நரம்பியல் துறை டாக்டர் ராமகிருஷ்ணன் கூறியதாவது:

"நரம்பியல் மருத்துவத் துறையில் சிகிச்சையின்போது ஒரு நோயாளி, 50 சதவீதத்திற்குமேல் வலியால்தான் அவதிப்படுகிறார்.

நரம்பியல் நோயாளி முக்கியமாக சந்திக்கும் பிரச்னைகளில் ஒன்று, தலைவலி. திடீரென ஒருவருக்கு 4 முதல் ஒரு வார காலம் தலைவலி ஏற்பட்டால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் பிரச்னைகள் உடலில் உள்ளதா என்பது குறித்து பரிசோதனை செய்ய வேண்டும்.

'மைக்ரைன், டென்ஷன்' போன்ற காரணங்களால் நாள்பட்ட தலைவலி ஏற்படலாம். இதுவும், திடீரென தொடர்ச்சியாக வரக்கூடிய தலைவலியும் வேறு வேறு. இப்படிப்பட்ட பிரச்னையை சந்திக்க நேரிடும் ஒருவருக்கு மூளையில் இரத்தக் கசிவு அல்லது அடைப்பு அல்லது ஏதேனும் கட்டி உருவாகி அதில் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசோதனை மேற்கொண்டு அதற்கேற்ப சிகிச்சைகள் வழங்க வேண்டும்.

மற்றொன்று, முகத்தில் ஏற்படக்கூடிய மின்னல் வலி. பல் துலக்கும் போதும், சாப்பிடும் போதும், காற்று பட்டாலும் திடீரென இந்த வலி ஏற்படும். இதனால் சில நோயாளிகள் சாப்பிடக்கூட முடியாமல் அவதியடைகின்றனர்.



முகத்திற்கு மேல் வரும் இரத்த நாளங்களில் அழுத்தம் ஏற்படும்போது இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. இந்த வலியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகள் கொடுக்கப்படுகிறது. அடுத்தகட்டமாக அறுவை சிகிச்சை அல்லது 'ரேடியோ ஃப்ரீக்வன்சி' மூலமாக சிகிச்சை மேற்கொள்ளலாம்.

இந்தியாவில் சர்க்கரை வியாதி பலருக்கும் உள்ளது. 5 ஆண்டுகளுக்கு மேல் சர்க்கரை நோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு நரம்பு தளர்ச்சி ஏற்பட்டால் நோயாளிக்கு கால் எரிச்சல் அல்லது வலி ஏற்படலாம். இது காலில் ஊசி குத்துவது போன்ற உணர்வை ஏற்படுத்தும். இவர்கள் காலில் காற்றுபட்டால்கூட வலியை உணர்வார்கள். தைராய்டு, கொழுப்பு பிரச்னைகளால் பாதிக்கப்பட்டவர்களும் கை, கால்களில் எரிச்சலை உணர்வார்கள்.

அடுத்து, கழுத்து வலி மற்றும் முதுகு வலி ஒரு பெரிய பிரச்னையாக உள்ளது. முறையான உடற்பயிற்சி இல்லாமல் இருப்பதும், திடீரென திரும்புதல், அதிக எடைகள் தூக்கும்போதும், நரம்புகள் மீது அழுத்தம் அதிகரிக்கும்போதும் இந்த வலி ஏற்படுகிறது. இதற்கு முதலில் ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும். பின்னர் இவர்களுக்கு மருந்து, மாத்திரைகள் கொடுப்பதன் மூலமாகவும், நல்ல ஓய்வு எடுப்பதன் மூலமாகவும், பிசியோதெரபி சிகிச்சை மூலமாகவும் 90 சதவீத வலியைக் குணப்படுத்திவிடலாம். இதற்கு அடுத்தகட்டமாக அறுவை சிகிச்சை மூலமாகவும் இதற்குத் தீர்வு காண முடியும்

அக்கி என்பது முகத்திலும் உடலில் வேறு பகுதிகளிலும் ஏற்படலாம். அக்கி பாதிப்பு ஏற்பட்ட ஒருவருக்குத் தாங்க முடியாத வலி ஏற்படும். இது மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை இருக்கும். இதற்கும் மருந்துகளே முதல் சிகிச்சை. மருந்துகளால் பலன் ஏற்படவில்லை என்றால் அடுத்ததாக 'பேட்ச் ஒட்டி' சிகிச்சை அளிக்கப்படும். இதற்கடுத்த கட்டமாக ஊசிகள் மூலமாகத் தீர்வு காணலாம்.

நோயாளிகளுக்கான ஆரோக்கிய ஆலோசனைக் குறிப்புகள்:

முதுகு மற்றும் கழுத்து வலி வராமல் இருக்க தினமும் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். தசைகளுக்கு அதிகமாக அழுத்தம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தினமும் 20 நிமிடங்களாவது நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். வீட்டின் அருகில் உள்ள கடைக்குச் செல்வதற்குக்கூட வாகனத்தின் உதவியை நாடிச் செல்ல வேண்டாம், ஒரு சிறிய நடைப்பயிற்சி செய்யலாம்.

பொதுவாக, நேரத்தைக் காரணம் காட்டி முதலில் நாம் தவிர்ப்பது உடற்பயிற்சியைத்தான். எனவே, நேரம் இல்லை என்று கூறி தியானம் மற்றும் உடற்பயிற்சியை உங்கள் வாழ்வில் இருந்து ஒதுக்க வேண்டாம். டிவி மற்றும் செல்போனில் மூழ்கி இருக்கும் நேரத்தை சற்றே தவிர்த்தாலே தினமும் உடற்பயிற்சி செய்துவிட முடியும்' என்றார்.

## கண் அழுத்தமா, உடனடி கவனிப்பு தேவை

**டாக்டர் மனோஜ் ராமசந்திரன், தலைமை கண் அறுவை சிகிச்சை நிபுணர்**

நமது உடம்பில் மிக முக்கியமான உறுப்பு, கண். அதில் ஏற்படக்கூடிய தொற்றுக்கள், பாதிப்புகள், அதற்கான தீர்வுகள் குறித்து தலைமை கண் அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் மனோஜ் ராமசந்திரன் கூறுகையில்,

'கண் வலிக்கு முக்கியக் காரணம், கண் அழுத்தம் *(Glaucoma)* ஆகும். கிளக்கோமா என்பது கண் கோளாறு ஆகும். இது கண்ணின் பின்புறத்தில் உள்ள மூளைக்குத் தகவல்களைக் கொண்டு செல்லும் பார்வை நரம்புக்கு நேரடி சேதத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு உரிய சிகிச்சை அளிக்காவிட்டால் பார்வைத் திறனில் நிரந்தர இழப்பை ஏற்படுத்தும். இது பெரும்பாலும் கண்ணின் அழுத்தம் அதிகரிப்பதால் (கண்ணில் உள்ள திரவம் காரணமாக) மற்றும் மரபு ரீதியாக வரக்கூடியது. கிளக்கோமா பொதுவாக இரண்டு கண்ணிலும் ஏற்படும். ஆனால் சேதத்தின் அளவு மாறுபடலாம்.

கிளக்கோமாவில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. ஓபன் ஆங்கிள் கிளக்கோமா மற்றும் ஆங்கிள் க்ளோஸர் கிளக்கோமா.

ஓபன் ஆங்கிள் கிளக்கோமா, இது கிளக்கோமாவின் மிகவும் பொதுவான வகையாகும். நாம் 5 நொடிகளுக்கு ஒரு முறை கண்களை சிமிட்டுவதன் மூலம் கண்களில் திரவம் சீராக பரவி, கண்கள் சிறப்பாக செயல்படுகின்றன. ஆனால், இவ்வகை கிளக்கோமா கண் திரவத்தை வெளியேற்றாமல் அடைத்து வைப்பதனால் கண் அழுத்தம் உருவாகி, பின்னர் பார்வை நரம்பை சேதமடைய வைக்கிறது. இந்த வகை கிளக்கோமா வலியற்றது மற்றும் ஆரம்பத்தில் பார்வை மாற்றங்களை ஏற்படுத்தாது. சிலருக்கு சாதாரண கண் அழுத்தத்திற்கு உணர்திறன் கொண்ட பார்வை நரம்புகள் இருக்கலாம்.

அவர்களுக்கு ஆரம்ப கட்டங்களில் எச்சரிக்கை அறிகுறிகள் அல்லது வெளிப்படையான அறிகுறிகள் எதுவும் இருக்காது. நோய் முற்றும்போது, உங்கள் புற (பக்க) பார்வையில் குருட்டுப் புள்ளிகள் உருவாகின்றன. இது பொதுவான அறிகுறிகளாகும்.

ஆங்கிள்க்ளோஸர் கிளக்கோமா அரிதானது, ஆனால் கடுமையான வலியை ஏற்படுத்தக் கூடியது. இந்த வகை கிளக்கோமா கருவிழி வீக்கம் ஏற்படும்போது ஏற்படுகிறது. வீங்கிய கருவிழி பகுதி முழுமையாக வடிகால் கோணத்தைத் தடுக்கிறது. வடிகால் கோணம் முற்றிலும் தடுக்கப்படும்போது திரவம் கண் வழியாக சுற்ற முடியாமல் கண் அழுத்தம் மிக விரைவாக உயர்கிறது. இது அக்கியூட் அட்டாக் என்று அழைக்கப்படுகிறது. இதனால் கண் பார்வை மங்கல், கடுமையான கண் மற்றும் தலை வலி, பல்புகளைக் காணும்போது வானவில் நிற வளையங்கள் அல்லது ஒளி வட்டங்கள் தெரிவது போன்ற பிரச்னைகள் வருகின்றன. ஆங்கிள்க்ளோஸர் கிளக்கோமா படிப்படியாக ஏற்படக்கூடும்.

இவை இல்லாமல், விபத்து போன்ற காரணங்களால் ஏற்படக்கூடிய கண் வலிகளும் உண்டு. நமது கண்களுக்குப் பின்னால் ஆப்டிக் என்னும் நரம்பு மூளையையும் கண்களையும் இணைக்கும் பாலமாக செயல்பட்டு வருகிறது. நாம் காண்பவை ஆப்டிக் நரம்பு மூலம் மூளையைச் சென்றடைந்து பின்னர் காட்சிகளாக நமக்குத் தென்படுகின்றன.



விபத்து நேரத்தில், இந்த நரம்பில் அடிபட்டால் கண் பார்வையை உடனே இழக்க நேரிடும். இதற்கு சிகிச்சை எதுவும் கிடையாது. எனவே, கண்களை மிகவும் பத்திரமாக பார்த்துக்கொள்ளுங்கள்.

மேற்கண்ட பிரச்னைகள், அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் உடனடியாக எங்கள் கே.ஜி. மருத்துவமனையை அணுகவும். எங்களிடம் உள்ள சிறப்பு வாய்ந்த மல்டி ஸ்பெசாலிட்டி கருவிகள் மற்றும் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் உள்ளனர். அவர்கள் உங்கள் பிரச்னைகளுக்கானத் தீர்வுகளை வழங்குவர்' என்றார்.

## மனநலம் காத்தால் மன வலி இல்லை!

**டாக்டர் பொன்னி முரளிதரன், மன நல மருத்துவர்**

மன வலி குறித்தும் அதனைக் கையாள்வது குறித்தும் கே.ஜி. மருத்துவமனையின் மன நல மருத்துவர் பொன்னி முரளிதரன் கூறுகையில்,

'பொதுவாகவே நாம் 'வலி' என்றதும் தலை வலி, கால் வலி, முதுகு வலி, இடுப்பு வலி, கழுத்து வலி ஆகிய வலிகளைத்தான் நினைப்போம். ஆனால், நம்மை அதிகம் பாதிக்கக்கூடிய மற்றொரு வலியும் இருக்கிறது. அதுதான் 'மன வலி'.

மனம் என்பது பூவைப் போன்று மென்மையானது. எப்போதும் மனம் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என அனைவரும் ஆசைப்படுவோம். ஆனால், மன வலியை ஏற்படுத்தும் விஷயங்களும் சூழ்நிலைகளும் கட்டாயம் ஏற்படும். இதை எவ்வாறு நாம் கையாள்கிறோம் என்பது மிகவும் முக்கியம்.

மன வலி என்பது மனச்சோர்வு அல்லது மன அழுத்தத்தால் ஏற்படும் ஒரு விளைவு. அதாவது நமது மூளையில் உற்பத்தியாகும் இரசாயனங்களின் விகித அளவு மாற்றங்களை மன வலி என்கிறோம். குறிப்பாக, நமது உடலின் ஒரு பகுதியில் ஏற்படும் வலியை நமக்கு உணரச் செய்வதே இந்த மூளைதான். எனவே, மனச்சோர்வு அல்லது மன அழுத்தம் எதனால் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அதை சரி செய்வது மிகவும் அவசியமாகும்.



மன வலி டீனேஜ், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என அனைவருக்கும் ஏற்படக்கூடிய ஒரு பாதிப்பு. குறிப்பாக, 17 அல்லது 18 வயதுடைய பதின் பருவத்தினருக்கு இந்த மன வலி அதிகமாகவே ஏற்படும். காரணம், அந்த பருவத்தில்தான் அவர்கள் தேர்வு போன்ற கடினமான விஷயங்களைப் புதிதாக எதிர்கொள்ள வேண்டும். அதை சுலபமாகக் கையாள்பவர்களும் உள்ளனர். அதேநேரத்தில் அதனை ஒரு சுமை என கருதி மன அழுத்தம் அடையும் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் மனநல ஆலோசனைகளைக் கட்டாயம் வழங்க வேண்டும். பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் மனநல மருத்துவர்களைக் கட்டாயம் அணுக வேண்டும்.

இதனைச் செய்யவில்லை என்றால் அவர்கள் தவறான பாதையைத் தேர்ந்தெடுப்பார்கள். இந்த வயதில் பெற்றோர் சொல்வதைவிட நண்பர்களும் மற்றவர்களும் சொல்வதே தனக்கு நல்லது என அவர்களுக்குத் தோன்றும். இதனால் பலரும் புகை, மது ஆகிய போதைப் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர். இளைஞர்கள் மட்டுமின்றி வேலைப்பளுக் காரணமாகவும் குடும்பச் சூழல் காரணமாகவும் ஆண்கள், பெண்கள் என இரு பாலரும் மன வலி பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

கவலைகளை மறப்பதற்காக போதைப் பழக்கத்தைத் துவங்கினால் அது நாளடைவில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, நமது மனநிலையில் ஏற்படும் பாதிப்புகளைப் புரிந்துகொண்டு அதற்குண்டானத் தீர்வுகளைத் தேட வேண்டும்.

முதியவர்களைப் பொறுத்தவரை சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு ஆகியவை ஏற்பட்டதும், இயல்பாகவே அவர்களது உடல் நிலையை எண்ணி மன அழுத்தம் ஏற்படும். இவர்களும் மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

நமது கே.ஜி. மருத்துவமனையில் மனநல பாதிப்புகளைக் கண்டறிந்து சிகிச்சையளிக்க ஒருங்கிணைந்த அனுபவமிக்க மருத்துவக் குழுவினர் உள்ளனர். டீனேஜ் முதல் முதியவர்கள் வரை மனவலிக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதற்கு ஏற்ப மன நல ஆலோசனைகள், மாத்திரைகள், பயிற்சிகள் வழங்கப்பட்டு சிறப்பான முறையில் மனநல ஆரோக்கியம் மேம்படுத்தப்படுகிறது' என்றார்.

## அளவுக்கு மீறினால் உடற்பயிற்சியும் நஞ்சு!

**மோகன் காந்தி பிசியோதெரபிஸ்ட்**

கே.ஜி. மருத்துவமனையின் பிசியோதெரபிஸ்ட் மோகன் காந்தி வலிகள் குறித்தும் அதற்கான தீர்வு குறித்தும் கூறியதாவது,

'வலிகளில் முக்கியமாக கழுத்து வலி, இடுப்பு வலி, தோள்பட்டை வலி, முழங்கால் வலி ஆகிய நான்கும் மிக முக்கியமானதாகும். ஒரு நாளைக்கு இந்த வலிகளால் பாதிக்கப்பட்ட 25 முதல் 30 நோயாளிகள் வரை என்னைச் சந்திக்கின்றனர். அவர்கள் அனைவரும் பல்வேறு விதமான வலிகள் காரணமாக சிகிச்சை எடுத்துக்கொள்ள வருகின்றனர்.

வயது ஆகும்போது எலும்பில் ஏற்படக்கூடிய மாற்றம், தசையில் ஏற்படும் மாற்றம், வேலை செய்யும்பொழுது ஏற்படக்கூடிய மாற்றம், சத்துக் குறைவினால் ஏற்படக்கூடிய மாற்றம் என வலிகளுக்கான காரணத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.



மேலும், உட்காரக்கூடாத தோரணையில் அமர்ந்து வேலை செய்வது, தொடர்ந்து கழுத்தை ஆட்டாமல் குனிந்தபடி செல்போன் பார்த்துக் கொண்டிருப்பது, டயாபட்டிக் பேஷண்டுகளுக்கான பல்வேறு விதமான வலிகள், தன் உடல் அளவு, சக்திக்கும் அதிகமாக விளையாடுவது, **warm up** செய்யாமலே விளையாடத் தொடங்குவது என வலி வருவதற்கான காரணங்கள் விரிவடைகிறது.

நாம் என்ன செயல் செய்கிறோமோ, அதாவது உடற்பயிற்சி, ஓட்டப்பயிற்சி, கராத்தே, யோகா, விளையாட்டு என எதை செய்ய நினைக்கிறோமோ அதற்கு ஏற்றார்போல, நமது தசைகளையும் எலும்புகளையும் தளர்த்தும் சிறிய பயிற்சிகளை முதலில் செய்துவிட்டு, பின்னர் அந்தக் காரியத்தை செய்தால் வலி ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

நடைப்பயிற்சி செல்லக் கூடியவர்கள் முதல் ஐந்து நிமிடங்கள் மெதுவாக நடக்க வேண்டும். அடுத்து 10 நிமிடங்கள் வேகமாக நடக்கலாம். பயிற்சி முடிக்கும்பொழுது 5 நிமிடங்கள் மெதுவாக நடக்க வேண்டும். விளையாட்டோ, உடற்பயிற்சி என எதுவாக இருந்தாலும் அதற்கு முன்பாக வாம் அப் செய்வது மிகவும் அவசியம். அதேபோல் உடற்பயிற்சி முடிந்தவுடன் வாம் டவுன் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் வேகமாகத் துடிக்கும் இதயத் துடிப்பை சீராகக் குறைக்க முடியும். அதுவே வாம் டவுன் செய்யாவிட்டால் உடல் சோர்வு ஏற்பட்டு மயக்க நிலை ஏற்படலாம்.

அத்துடன், 40 நிமிடம் மட்டுமே நடக்கக்கூடிய ஆற்றல் பெற்ற ஒருவர், தொடர்ந்து ஒன்றரை மணி நேரம் நடந்தால் அவருக்கு வலி வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். இதேபோல, தமக்குத் தெரியாத விஷயங்களை முறைப்படித் தெரிந்துகொள்ளாமல் செய்வது மற்றும் கழுத்து வலி, முதுகுத் தண்டுவட வலி, தொடர்ந்து கணினி மௌசை இயக்கும்போது விரல்களில் ஏற்படக்கூடிய வலிகள் எனப் பல்வேறு விதமான வலிகளுக்கு கணினித்துறையில் பணிபுரிபவர்கள் ஆளாகிறார்கள். சிலருக்குத் தும்மும்போதோ, இருமும்போதோ, பாத்ரூமில் லேசாக வழுக்கும்போதோ தசைப்பிடிப்பு, எலும்பு வலிகள் வருவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது.

முக்கியமாக, மூட்டு வலி பலரையும் வாட்டி வதைக்கிறது. வயதானவர்கள் முட்டி வலி வருவதற்குக் காரணம், எலும்புத் தேய்மானம், வயது முதுமை. இளம் வயதில் முட்டி வலி வருவதற்கு காரணம், இளம்பெண்கள் ஹைஹீல்ஸ் அணிந்து நடப்பது, செய்யக்கூடாத விஷயத்தைத் தெரியாமல் செய்வது போன்றவையாகும். இதுபோன்ற காரணங்களால் முட்டி வலி அதிகமாக வருகிறது.

அடுத்ததாக, தோள்பட்டை வலி. கழுத்து வலி, சோல்டர் வலி உள்ளவர்களுக்கு எக்ஸ்ரே, சி.டி. ஸ்கேன் மூலமாக அதன் தன்மையைத் தெரிந்துகொண்டு மருந்து, உடற்பயிற்சி, பிசியோதெரபி ஆகியவற்றின் மூலமாக படிப்படியாக வலிகளைக் குணப்படுத்தலாம். எந்த சூழ்நிலையிலும் வலி வருவதை சாதாரணமாக நினைக்காமல், உடனடியாக தகுந்த சிகிச்சை எடுத்துக்கொண்டால் நாம் வலிகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்' என்றார்.




# பலன் கொடுக்குமா...? வெளிநாட்டு சுற்றுப்பயணம்!

✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

ஒவ்வொரு ஆண்டும் பன்னாட்டு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் மாநில அரசால் உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தப்படுவது வழக்கம். வரும் 2024ம் ஆண்டு ஜனவரி 10, 11 ஆம் தேதி தமிழ்நாடு அரசு சார்பில் இந்த மாநாடு சென்னையில் நடத்தப்பட இருக்கிறது. தமிழக அரசு இதற்கான ஆயத்த பணிகளில் இப்போதே ஈடுபட தொடங்கி உள்ளது.

சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசுமுறை பயணமாக கடந்த 23 ஆம் தேதி முதல் 9 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். சென்னையில் இருந்து விமானம் மூலம் சிங்கப்பூர் சென்ற முதல்வர் ஸ்டாலின், இரு நாட்டு தலைவர்கள், தொழிலதிபர்களை சந்தித்து தமிழகத்தில் 2024ம் ஆண்டு நடைபெறும் உலக முதலீட்டாளர் மாநாட்டிற்கு நேரில் வருமாறு அழைப்பு விடுத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சிங்கப்பூரை சேர்ந்த முக்கிய தொழில் நிறுவனங்களுடன் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்தானது. சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் நடத்திய நிகழ்வுகளிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார். பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் மே 25ம் தேதி ஜப்பான் நாட்டுக்குச் சென்றார்.

அங்கு டோக்கியோ, ஒசாகா ஆகிய ஜப்பானின் முக்கிய நகரங்களுக்கு சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், அந்நாட்டு முதலீட்டாளர்களை சந்தித்து தமிழ்நாட்டில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு வரும்படி அழைப்பு விடுத்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். வெளிநாடு வாழ் தமிழர்கள் சங்கத்தின் சார்பில், ஜப்பானில் நடைபெற்ற நிகழ்ச்சியிலும் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் மு.க.ஸ்டாலின் தங்கி இருந்தபோது 6 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் தொடங்க ரூ. 819 கோடி மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அவர் முன்னிலையில் கையெழுத்தாகின. ரூ. 128 கோடி மதிப்பில் மருத்துவ உபகரண உற்பத்தி நிறுவனமான ஓம்ரான், இந்தியாவில் முதன் முறையாக தமிழ்நாட்டில் தொழிற்சாலையை தொடங்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தொழில் துறையின் மூத்த அதிகாரிகள் உடன் சென்றனர். சிங்கப்பூரில் போக்குவரத்து தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் ஈஸ்வரன், உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் சண்முகம் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்

மேலும், சிங்கப்பூரின் முன்னணி தொழல் நிறுவனங்களான டெமாசெக், செம்கார்ப், கேப்பிட்டாலாண்டு இன்வஸ்மன்ட் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்களையும் சந்திப்பார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பயணத்தின்போது தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம், சிப்காட், பேம்டிஎன் , டான்சிம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை சிங்கப்பூர் தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு பல்கலைக்கழகத்துடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்தன

இதற்குப் பிறகு ஜப்பானுக்குச் சென்ற முதல்வர், தொழில்துறைத் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் சந்தித்து தமிழ்நாட்டில் நடக்கவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுத்தார். வழக்கமாக, தமிழ்நாட்டில் இருந்து செல்லும் அரசுக் குழுக்கள் டோக்கியோ நகருக்கு மட்டுமே செல்லும் நிலையில், இந்த முறை முதலமைச்சர் இந்திய வம்சாவளியினர் அதிகம் வசிக்கும் ஒசாகா நகருக்கும் சென்றார்.

இது தவிர, 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்துகொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் முதல்வர் கலந்துகொண்டார். இதற்கு முன்பாக 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய அரபு நாடுகளுக்கு ஒரு வெளிநாட்டுப் பயணத்தை மு.க. ஸ்டாலின் மேற்கொண்டார்.

பொதுவாகவே, முதலமைச்சர்கள் இதுபோல தொழில்துறை முதலீடுகளை ஈர்ப்பதற்காக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போதும் முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தும்போது முந்தைய பயணத்திலிருந்து மாநாட்டிலிருந்தும் எவ்வளவு முதலீடு பெறப்பட்டது என்ற கேள்வி தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது.

தற்போதும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிச்சாமி இதே கேள்வியை எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், தான் முதலமைச்சராக இருந்தபோது மேற்கொண்ட அமெரிக்க, துபாய் பயணங்களின் மூலம் சுமார் 8,800 கோடி ரூபாய்க்கு முதலீடுகளை ஈர்த்ததாகவும் அதன் மூலம் 31 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், தி.மு.க. ஆட்சியில் எந்த ஒரு வெளிநாட்டு ஒப்பந்தமும் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்படவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். சென்னை விமான நிலையத்திலிருந்து முதலமைச்சர் புறப்படுவதற்கு முன்பாகச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, முந்தைய வெளிநாட்டுப் பயணங்களின் மூலம் இதுவரை வந்த முதலீடுகள் எவ்வளவு வந்திருக்கிறது எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர், கடந்த பயணத்தன்போது ஆறு நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன என்றும் ஷெராப் குழும நிறுவன முதலீடுகளை மேற்கொண்டிருப்பதாகவும் லூலூ குழுமம் கோயம்புத்தூரில் தன் திட்டத்தை தொடங்கிவிட்டதாகவும் சென்னையில் நிலம் தேர்வு செய்யும் பணிகளை மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து பொருளாதார விமர்சகர்கள் கூறும்போது, முதலீடுகளை ஈர்க்க இது போன்ற பயணங்கள் அவசியம்தான். "இது போன்ற பயணங்களை முறையாக மேற்கொண்டால் நிச்சயம் பயனளிக்கும். நாம் முதலீடுகளை ஈர்ப்பதில் தீவிரமாக இருக்கிறோம் என்பதை முதலீட்டாளர்கள் புரிந்துகொள்வார்கள். நம்மால் என்னவெல்லாம் சலுகைகளை அளிக்க முடியும், அவர்களால் எப்போது முதலீடு செய்ய முடியும் என்பதெல்லாம் இதுபோன்ற பயணங்களில் தெளிவாகத் தெரியவரும். நேரில் பார்த்துப் பேசுவதால், சொன்னதைக் காப்பாற்றும் எண்ணம் வரும்.

அது தவிர, இது போலப் பயணங்களை மேற்கொள்வது, அதில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாவது குறித்த செய்திகள் வெளியானால், அது மேலும் பல நிறுவனங்களின் கவனத்தை ஈர்க்க உதவும். ஆனால், முதலீடுகளை ஈர்ப்பதற்காக நாம் கூடுதலாகச் சலுகைகளை அளிக்க வேண்டியதில்லை.

இந்தியா ஒரு மிகப் பெரிய சந்தை. எங்கே சந்தை இருக் கிறதோ, அங்கே முதலீடு வரும். ஆகவே, ஒவ்வொரு மாநிலமும் முதலீடுகளை ஈர்க்க போட்டிபோட்டுக்கொண்டு சலுகைகளைக் கொடுக்க வேண்டியதில்லை. இதனால், அரசுகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, எப்போதுமே ஓரளவுக்கு மேல் சலுகைகளை அரசுகள் வழங்கக்கூடாது

"ஒவ்வொரு அரசும் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்துகிறார்கள். பயணங்களை மேற்கொள்கிறார்கள். அதில் எவ்வளவு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன என்பதைச் சொல்கிறார்கள்.

ஆனால், ஓராண்டு கழித்து அதில் உண்மையிலேயே எவ்வளவு முதலீடு, நிஜமாகியிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். அது எவ்வளவு குறைவாக இருந்தாலும், அந்த விவரத்தைச் சொல்லத் தயங்கவேகூடாது.

ஏன் பிற முதலீடுகள் வரவில்லை என்பதையும் விளக்கலாம். இப்படியான வெளிப்படைத் தன்மை இருப்பது நன்மையே பயக்கும் என்றனர்.

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான அரசு பதவியேற்ற பிறகு, 226 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் 2,95,339 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் வந்திருப்பதாகவும் 4,12,565 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்திருப்பதாகவும் தமிழ்நாடு அரசு கூறுகிறது.

சமீபத்தில் மிட்சுபிஷி நிறுவனம் குளிர்சாதனப் பெட்டிகளைத் தயாரிக்கும் ஆலைக்கென 1891 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. நிஸலன் மற்றும் ரெனால்ட் நிறுவனங்கள் இணைந்து தமிழ்நாட்டில் உள்ள தங்கள் ஆலையை விரிவாக்கம் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

முதல்வரின் சிங்கப்பூர், ஜப்பான் சுற்றுப்பயணத்தால் எத்தகைய பலன் கிடைக்கும் என்பதற்கான விடை அடுத்த ஜனவரியில் நடக்கும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் தெரியும்.

இருப்பினும், ஆலைகள் தொடங்கப்பட்டு உற்பத்தி தொடங்கினால் மட்டும் தான் அந்த ஆலைகளால் தமிழகத்துக்கு எந்த அளவுக்கு பயன் கிடைத்திருக்கிறது என்பது தெரியவரும்.

**தி.மு.க. தலைமையிலான அரசு பதவியேற்ற பிறகு, 226 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் 2,95,339 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் வந்திருப்பதாகவும் 4,12,565 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்திருப்பதாகவும் தமிழ்நாடு அரசு கூறுகிறது ,,**



## கே.பி.ஆர். குழுமத்தின் சார்பில்
# பெண்களுக்கான வழிகாட்டல் விழிப்புணர்வு கருத்தரங்கு



கே.பி.ஆர். கல்விக் குழுமத்தில் பயின்ற சிறந்த மாணவிகளுக்கு விருதுகள் வழங்கிய போது எடுத்துக்கொண்ட குழு புகைப்படம்.

✍ தி கோவை மெயில்

கோவை அரசூர் கே.பி.ஆர். மில் குழுமத்தில் கல்வியாளர்கள் சங்கமம் அமைப்பின் முயற்சியால், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியுடன் இணைந்து 'விடியல் திரும்பும் திசையெல்லாம் கிழக்கு' என்ற தலைப்பில் பெண்களுக்கான வழிகாட்டுதல் விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கை கே.பி.ஆர். குழுமங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் கே.பி.ராமசாமி தலைமையேற்று நடத்தினார். சேலத்தை சேர்ந்த கண் மருத்துவர் இராம செல்வரங்கம், தஞ் சாவூர் மருத்துவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் ஆனந்தி மற்றும் ஆதரவற்றோர் மகளிர் நல வாரிய உறுப்பினர் கல்யாணந்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

கருத்தரங்கத்தின் தொடக்கவுரை மற்றும் நோக்கவுரையை தமிழ்நாடு அரசின் ஆசிரியர் மனசுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ்குமார் வழங்கினார். அவர் பேசுகையில், தன்னிறைவடைந்த ஒரு மனிதர் தன்னால் இயலுமெனில், தன்னைச் சுற்றியிருக்கும் சமூகம் பற்றிச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்கின்ற ஒரு மனிதராக கே.பி ராமசாமி இருப்பதால்தான் வறுமையின் காரணமாக பஞ்சாலைப் பணிக்கு வந்தவர்களில் இருந்து இன்றைக்கு 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கி இருக்கின்றார் எனக் குறிப்பிட்டு பேசினார்.

கருத்தரங்கில் இந்திய அரசின் பேரிடர் மேலாண்மைக்குழுவின் முன்னாள் ஆலோசகர் திருப்புகழ், முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோது, பெண்கள் முன்னேறினால்தான் இந்த நாடு முன்னேறும் என்பதை உணர்ந்த நிறுவனமாக இந்த கே.பி.ஆர். நிறுவனம் திகழ்கிறது. இதனைப் பாடமாக எடுத்துக்கொண்டு, ஓர் ஆய்வை மேற்கொண்டு ஒவ்வொரு நிறுவனங்களும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு கல்வியைக் கொடுக்க முன்வர வேண்டும் எனப் பேசினார்.

பின்னர் நிகழ்வில் தலைமை உரையாற்றிய கே.பி.ஆர். குழுமங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் கே.பி.ராமசாமி, இங்கு ஆண்டுக்கு 3 ஆயிரத்தி 500 பஞ்சாலை தொழிலாளிகள் கல்வி பயின்று வருகின்றனர் என்பதையும், உயர் கல்வி முடித்தவர்கள் கேம்பஸ் இன்டர்வியூ தேர்வாகி பல உயர் பதவிகளை பெற்றுள்ளதையும் கூறினார். தற்போது பஞ்சாலையில் வேலை செய்துக்கொண்டே படித்து சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டுள்ளது, என்கிறார்.

இந்நிகழ்வில் கே.பி.ஆர். மில் கல்வி நிறுவனத்தின் முதல்வர் சரவணபாண்டியன், கே.பி.ஆர். ஆலை வளாக துணைத் தலைவர் சோமசுந்தரம் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் திரளாக பங்கேற்றனர்.

## மஞ்சப் பை வழங்கும் தானியங்கி இயந்திரம்



மஞ்சப் பை வழங்கும் தானியங்கி இயந்திரத்தை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் துவக்கி வைத்தார்.

✍ தி கோவை மெயில்

மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் மஞ்சப் பை வழங்கும் தானியங்கி இயந்திரம் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி துவக்கி வைத்தார்.

தமிழகத்தில் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக துணிப்பைகளை உபயோகிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக மீண்டும் மஞ் சப் பை என்ற திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 2021 ம் ஆண்டு டிசம்பர் மாதம் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து மாவட்டந்தோறும் மஞ் சப்பைகள் விநியோகம் செய்யப்பட்டு அதனை உபயோகிப்பதற்கான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மஞ்சப்பை வழங்கும் தானியங்கி இயந்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி துவக்கி வைத்தார். இது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக கோவையில் வைக்கப்பட்டுள்ள முதல் தானியங்கி இயந்திரமாகும். இதனைத் தொடர்ந்து ஆர்.எஸ்.புரம் மற்றும் சிங்காநல்லூர் பகுதிகளில் உள்ள உழவர் சந்தைகள் உட்பட 5 இடங்களில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் இந்த தானியங்கி இயந்திரங்கள் வைக்கப்பட உள்ளன.

இது தவிர கோவை மாநகராட்சிக்கு 5 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த 5 இயந்திரங்களை பேருந்து நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்க மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.



# குழந்தைகள் நலம் காக்கும் இதய சிகிச்சைகள்!

தி கோவை மெயில்

குழந்தைகளுக்கு ஏற்படும் இதயம் சார்ந்த பல்வேறு பாதிப்புகள் குறித்தும், அவற்றிற்கான சிகிச்சை வாய்ப்புகள் குறித்தும் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையின் குழந்தைகள் இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் வினோத் துரைசாமி கூறியதாவது,

'குழந்தைகளுக்கான இதய பாதிப்புகளைத் தீவிரமற்றது, தீவிரமானது என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தீவிரமற்ற பிரச்னைகளில் பல, நாளடைவில் தானாகவே சரியாகும். தீவிரமான பாதிப்புகளுக்கு உடனடி சிகிச்சை தேவைப்படும்.

நூறில் ஒரு குழந்தைக்கு, பிறவியிலேயே ஒருவகை இதய பாதிப்புகள் (congenital heart disease) ஏற்படுகின்றன. இதயக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு, இதயத்திலிருந்து இரத்தத்தைக் கொண்டு செல்லும் முதன்மையான இரத்தக்குழாய் குறுகி இருப்பது, இதயத்தில் ஏற்படும் ஓட்டை, இதய வால்வு சுருங்கியிருப்பது, இதயம் முழுமையாக வளர்ச்சி அடையாமல் இருப்பது போன்ற பாதிப்புகள் இதற்கு காரணமாக இருக்கலாம். இவை தவிர, ஆக்சிஜன் குறைபாடு பாதிப்பான Cyanotic disease குழந்தைகளைப் பாதிக்கும் இதய நோய்களாகும். 25% congenital நோய்கள் தீவிர நோய் பாதிப்புகளாகவே ஏற்படும். அவற்றுக்கு உடனடி சிகிச்சை அவசியமாகும்.

### இதய பாதிப்புகளை எவ்வாறு கண்டுபிடிப்பது?

குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு மாதங்களில் தாய்ப்பால் குடிக்கும்போது மூச்சு விடுவதில் சிரமப்படுவர். இதனால் தொடர்ச்சியாக பால் குடிக்காமல் விட்டு விட்டு பால் குடிப்பார்கள். பால் குடிக்கவே சிரமப்படுவார்கள்.

இதயத்துடிப்பும் மூச்சு விடுவதும் தாறுமாறாக இருக்கும். குழந்தைகள் சோர்வாக காணப்படும், குழந்தையின் எடை அதிகரிக்காது, தொடர்ச்சியாக இருமல், சளி, நிமோனியா, காய்ச்சல் ஆகியவை ஏற்படும். தவிர, ஆக்சிஜன் குறைபாடு பிரச்னை காரணமாக நாக்கு மற்றும் விரல் நகங்கள் நீல நிறத்தில் மாறும்.

### ஆக்சிஜன் குறைபாடு எவ்வாறு ஏற்படுகிறது?

இதயத்தின் வலது பகுதியில் அசுத்தமான இரத்தம் இருக்கும். அங்கிருந்து நுரையீரலுக்கு இரத்தம் சென்று சுத்திகரிக்கப்பட்டு, அதாவது ஆக்சிஜன் கலக்கப்பட்டு இதயத்தின் இடது பகுதிக்கும் மற்ற உறுப்புகளுக்கும் இரத்தம் செல்லும். இதில் பாதிப்புகள் ஏற்பட்டு சுத்தமான இரத்தமும் அசுத்தமான இரத்தமும் கலக்கும்போது சிஹ்ணீஸீஷீஉவீஉ இதய பாதிப்பு ஏற்படுகிறது. இதையே ஆக்சிஜன் குறைபாடு என்கிறோம்.

சாதாரணமாக உடலில் ஆக்சிஜன் அளவு 95 சதவிகிதத்திற்குமேல் இருக்க வேண்டும். 90 சதவிகிதத்திற்குக் கீழ் இருந்தால் அபாயகரமான நிலை. இந்த பாதிப்பு இருக்கும் குழந்தைகளுக்கு ஆக்சிஜன் அளவு குறைந்து நாக்கு மற்றும் விரல் நகங்கள் நீல நிறத்தில் இருக்கும்.

**டாக்டர் வினோத் துரைசாமி, குழந்தைகள் இதய சிகிச்சை நிபுணர், கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை**

### சிகிச்சை முறைகள் என்னென்ன?

குழந்தைகள் நல மருத்துவர்கள் குழந்தைகளை பரிசோதித்துப் பார்த்து, இதய நோய் பாதிப்புகளைக் கண்டறிவர். பிறகு குழந்தைகள் இதய நல மருத்துவரிடம் சிகிச்சைக்காக அனுப்புவர். இங்கு அவர்களுக்கு மார்பு பகுதி எக்ஸ்ரே, இசிஜி ஆகியன முதற்கட்டமாக எடுக்கப்படும். பிறகு எக்கோகார்டியோகிராம் (echocardiogram) எனும் இதய பரிசோதனையின் மூலம் இதயத்தில் ஓட்டை அடைப்பு அல்லது சிஹ்ணீஸீஷீஉவீஉ நோய் பாதிப்புகள் இருக்கின்றனவா என்பது கண்டறியப்படும். பிறகு அதற்கான சிகிச்சைகள் வழங்கப்படும்.

சிறிய அளவிலான இதய ஓட்டைகள் இருந்தால், அதற்கு அறுவை சிகிச்சை தேவைப்படாது. நாளடைவில் தானாகவே அந்த ஓட்டை மறைந்துவிடும். அதுவே இரத்தக் குழாய்களில் அடைப்பு போன்ற பிரச்னைகள் இருந்தால் கட்டாயம் அதற்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

முன்பு 'திறந்த இதய அறுவைசிகிச்சை' செய்யப்பட்டுவந்த நிலையில் தற்போது நவீன தொழில்நுட்ப உதவியோடு எளிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆஞ்சியோகிராம் மூலம் தொடைப் பகுதியில் உள்ள இரத்த நாளங்களில் இருந்து இதயத்திற்கு நுண்குழாய்கள் அனுப்பப்பட்டு, இதயத்தில் உள்ள ஓட்டைகள் சரிசெய்யப்படுகின்றன. அடைப்புகள் இருந்தால் அவையும் அகற்றப்படுகின்றன.

இந்த அறுவை சிகிச்சையானது, சுமார் ஒரு மணி நேரத்தில் முடிந்துவிடும். இந்த சிகிச்சை மேற்கொள்ளும் குழந்தைகள் அடுத்த நாளே வீடு திரும்பி, இயல்பு வாழ்க்கைக்கு உடனடியாகத் திரும்ப முடியும். தழும்புகளும் இருக்காது.

அறுவை சிகிச்சை முடிந்து ஒருசில வருடங்களுக்கு மட்டும் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும். தீவிர பாதிப்பிற்காக சிகிச்சை மேற்கொண்டவர்கள் தொடர்ச்சியாக மருத்துவ ஆலோசனைகள் பெற வேண்டும்.

### குழந்தைகள் இதய பாதிப்புகளுக்கான காரணங்கள் என்னென்ன?

குழந்தை கருவில் இருக்கும்போது முதல் இரண்டு மாதங்களில் குழந்தையின் இதயம் உருவாகும். அந்த சமயத்தில் தாய்க்கு அம்மை போன்ற நோய்த்தொற்று ஏற்பட்டு இருந்தாலும், கட்டுப்படுத்தப்படாத சர்க்கரை நோய் இருந்தாலும், மருத்துவர்கள் பரிந்துரைக்காத மருந்து மாத்திரைகளை சாப்பிட்டாலும் குழந்தைகளுக்கு இதய பாதிப்புகள் ஏற்படலாம். இவை தவிர மரபணு ரீதியாகவும் இந்த பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

### பெற்றோர் செய்ய வேண்டியது என்ன?

குழந்தைகளைப் பெற்றோர் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். பிறக்கும்போதே இந்த அறிகுறிகள் தென்பட்டாலும், பிறந்த பின்பு இந்த அறிகுறிகள் தென்பட்டாலும், அவை தீவிரமான அல்லது தீவிரமற்ற இதய பாதிப்பாக இருக்கக் கூடும். எனவே அலட்சியம் செய்யாமல் உடனடியாக குழந்தைகள் நல மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்.

மரபணு ரீதியாக இந்த பாதிப்பு தொடர வாய்ப்பு இருப்பதால் பெற்றோர், அவர்களது குழந்தைகளை தொடர்ச்சியாக மருத்துவக் கண்காணிப்பிற்கு உட்படுத்த வேண்டும்.

கருவுற்ற தாய்மார்கள் காய்ச்சல், சளி உட்பட எந்த நோய் பாதிப்புகள் வந்தாலும் மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டுமே தவிர, தானாக மருந்துகளை எடுத்துக்கொள்ளக் கூடாது. சர்க்கரை நோய் இருக்கும் கருவுற்ற தாய் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கிஸீஷீனீணீறீஹ் ஸ்கேன் பரிசோதனையிலேயே கண்டுபிடிக்கப்பட்டு, 90% இதய பாதிப்புகள் கருவுற்ற ஐந்து மாதங்களிலேயே சரிசெய்யப்படும். மற்றொரு முக்கியமான விஷயம், மருத்துவர் உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என பரிந்துரைத்தால் பெற்றோர் தாமதிக்கக் கூடாது. காரணம், மருத்துவர் பரிந்துரைக்கும்போது பாதிப்பை சரி செய்வது சாத்தியம். தாமதம் செய்வதால் சில வருடங்களுக்குப் பிறகு அதற்கான சாத்தியம் இல்லாமல் போகும். எனவே, குழந்தைகளுக்கு நல்ல வாழ்வைத் தர மருத்துவரின் ஆலோசனைப்படி உரிய சிகிச்சைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

---

கே.பி.ஆர். குழுமத்தின் சார்பில்

## பெண்களுக்கான வழிகாட்டல் விழிப்புணர்வு கருத்தரங்கு

தி கோவை மெயில்

கோவை அரசூர் கே.பி.ஆர். மில் குழுமத்தில் கல்வியாளர்கள் சங்கமம் அமைப்பின் முயற்சியால், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியுடன் இணைந்து 'விடியல் திரும்பும் திசையெல்லாம் கிழக்கு' என்ற தலைப்பில் பெண்களுக்கான வழிகாட்டுதல் விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கை கே.பி.ஆர். குழுமங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் கே.பி.ராமசாமி தலைமையேற்று நடத்தினார். சேலத்தை சேர்ந்த கண் மருத்துவர் இராம செல்வரங்கம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் ஆனந்தி மற்றும் ஆதரவற்றோர் மகளிர் நல வாரிய உறுப்பினர் கல்யாணந்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

கருத்தரங்கத்தின் தொடக்கவுரை மற்றும் நோக்கவுரையை தமிழ்நாடு அரசின் ஆசிரியர் மனசுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ்குமார் வழங்கினார். அவர் பேசுகையில், தன்னிறைவடைந்த ஒரு மனிதர் தன்னால் இயலுமெனில், தன்னைச் சுற்றியிருக்கும் சமூகம் பற்றிச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்கின்ற ஒரு மனிதராக கே.பி ராமசாமி இருப்பதால்தான் வறுமையின் காரணமாக பஞ்சாலைப் பணிக்கு வந்தவர்களில் இருந்து இன்றைக்கு 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கி இருக்கின்றார் எனக் குறிப்பிட்டு பேசினார்.

கருத்தரங்கில் இந்திய அரசின் பேரிடர் மேலாண்மைக்குழுவின் முன்னாள் ஆலோசகர் திருப்புகழ், முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோது, பெண்கள் முன்னேறினால்தான் இந்த நாடு முன்னேறும் என்பதை உணர்ந்த நிறுவனமாக இந்த கே.பி.ஆர். நிறுவனம் திகழ்கிறது. இதனைப் பாடமாக எடுத்துக்கொண்டு, ஓர் ஆய்வை மேற்கொண்டு ஒவ்வொரு நிறுவனங்களும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு கல்வியைக் கொடுக்க முன்வர வேண்டும் எனப் பேசினார்.

பின்னர் நிகழ்வில் தலைமை உரையாற்றிய கே.பி.ஆர். குழுமங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் கே.பி.ராமசாமி, இங்கு ஆண்டுக்கு 3 ஆயிரத்தி 500 பஞ்சாலை தொழிலாளிகள் கல்வி பயின்று வருகின்றனர் என்பதையும், உயர் கல்வி முடித்தவர்கள் கேம்பஸ் இன்டர்வியூ தேர்வாகி பல உயர் பதவிகளை பெற்றுள்ளதையும் கூறினார். தற்போது பஞ்சாலையில் வேலை செய்துக்கொண்டே படித்து சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டுள்ளது, என்கிறார்.

இந்நிகழ்வில் கே.பி.ஆர். மில் கல்வி நிறுவனத்தின் முதல்வர் சரவணபாண்டியன், கே.பி.ஆர். ஆலை வளாக துணைத் தலைவர் சோமசுந்தரம் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் திரளாக பங்கேற்றனர்.

---

கே.ஜி. மருத்துவமனையில்

## புதிய பிசியோதெரபி சிகிச்சை மையம் திறப்பு!

தி கோவை மெயில்

கே.ஜி. மருத்துவமனையில் இடுப்புத்தளம், நரம்புத்தசை மற்றும் தசைக்கூட்டு ஆகியவைக்கு டிஜிட்டல் சிகிச்சை மையம் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் கே.ஜி.பக்தவத்சலம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இம்மையத்தினை திறந்து வைத்தார். பின்னர் அவர் பேசுகையில், காயம், நோய் அல்லது இயலாமை, உடல் தளர்வு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயக்கம் மற்றும் பிஸியோ தெரபி சிகிச்சைகளை ஜோகோவின் டிஜிட்டல் கருவிகள் மூலம் சிகிச்சை வழங்குகின்றனர். இதில் சிகிச்சை பெறுவோருக்கு தங்களது இயக்கம் மற்றும் செயல்பாட்டை மீட்டெடுக்க உதவுகிறது எனக் கூறினார்.




கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் கே.ஜி.பக்தவத்சலம், மருத்துவர்கள் ராமகிருஷ்ணன், மோகன் காந்தி, ஜோகோ மையத்தின் இடுப்புத்தள சிகிச்சையாளர் சுபலக்ஷ்மி மற்றும் குழுவினர் ஆகியோர் எடுத்துக்கொண்ட குழு புகைப்படம்.

மேலும் இதுகுறித்து நரம்பியல் மருத்துவர் டாக்டர் ராமகிருஷ்ணன் பேசுகையில், பெரும்பாலான வயதானவர்கள் இயலாமை, பக்கவாதம், வயது மூப்பினால் வரும் உடல் தளர்வு, வீழ்ச்சி போக்கு போன்றவற்றிற்கு வீழ்ச்சி தடுப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் இடுப்புத்தள தசைகள் வலுவற்று போவதால் சிறுநீர் அடங்காமை, சிறுநீர் அறியாமை போக்கு மற்றும் சிறுநீர் கசிவு போன்ற பிரச்சனைகளை தடுக்கவும் தசைகளை வலுப்படுத்தவும் பிஸியோ தெரபி சிகிச்சை முறைகள் வழங்கப்பட உள்ளன என்றார்.

இந்நிகழ்வில் ஜோகோ கிளினிக்கில் இருந்து இடுப்புத்தள சிகிச்சையாளர் சுபலக்ஷ்மி மற்றும் குழுவினர் கலந்துகொண்டனர்.

---

## மக்கள் குறை தீர்வு மனுக்களும் அதன் தீர்வும்

தி கோவை மெயில்

கோவையில் வாரம் தோறும் மக்கள் குறை தீர்வு கூட்டம் நடைபெறுகிறது. வாரத்தின் முதல் நாள் திங்கள்கிழமை காலை தொடங்கி மதியம் 2 மணி வரை மாவட்ட கலெக்டர் தலைமையில் மனுக்கள் பெறப்படும். இதில் கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தாலுகாக்கள், ஊர்களில் இருந்து தங்களுக்கு உள்ள குறையை கலெக்டரிடம் மனுக்களாக மக்கள் அளிப்பர்.

இதில் முதியோர் பென்ஷன், வீட்டுமனை பட்டா, வேலை கேட்டு, மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள், திருமண உதவித்தொகை, இடப் பிரச்சினைகள், கல்வி உதவித்தொகை, கர்ப்பிணி பெண்கள் உதவித்தொகை, கந்துவட்டி கொடுமை, கலப்புத் திருமணம் உதவித்தொகை, குடும்ப பிரச்சனை, ஆதரவற்றோர் உதவித்தொகை, வரதட்சணை கொடுமை, விவசாயிகள் கோரிக்கை என பல்வேறு மனுக்கள் கொடுக்கப்படுகிறது.

இந்த குறை தீர்வு கூட்டத்தில் கலெக்டர் தலைமையில் மாவட்ட வருவாய் அலுவலர், ஆர்டிஓ, அனைத்து தாலுகா தாசில்தார்கள், காவல் துறையின் உயரதிகாரிகள் என அனைத்து அரசு உயர் அதிகாரிகளும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். கலெக்டர் மனுக்களை பெற்று கையெழுத்திட்டு அந்தந்த துறை அதிகாரியிடம் நடவடிக்கை எடுக்க உத்தரவிடுவார். அதை அதிகாரிகள் பெற்று கொள்வார்கள் நடவடிக்கை எடுப்பதாக மக்களிடம் கூறப்படும் மக்களும் கலெக்டரிடம் மனு கொடுத்து விட்டோம் என மன மகிழ்ச்சியுடன் செல்வார்கள் இந்த மனுக்கள் அனைத்திற்கும் தீர்வு ஏற்படுகிறதா? மனுக்கள் கடைசியில் எங்கே செல்கிறது என்பதை மக்கள் எவ்வாறு தெரிந்து கொள்வது. அரசியல் கட்சியினர் படித்தவர்கள் ஒரு சிலர் தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி தன்னுடைய மனு யாரிடம் உள்ளது தீர்வை தெரிந்து கொள்கின்றன.

இது குறித்து மனு அளிக்க வந்த கிராமப்புற மக்களிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது: நாங்கள் வீட்டுமனை பட்டா கேட்டு 5வது முறையாக மனு அளித்துள்ளேன் எப்படியாவது இடம் கிடைத்தால் சரி இதுவரை எங்கள் ஊருக்கு வந்து அதிகாரிகள் யாரும் விசாரிக்கவில்லை. ஒரே கோரிக்கைக்காக மனு தொடர்ந்து கொடுத்துக் கொண்டு உள்ளேன். எங்கள் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? நிராகரிக்கப் பட்டதா? என்பதை அதிகாரிகள் நாங்கள் அறிந்து கொள்ளும்படி எளிமையாக்கினால் நல்லா இருக்கும் என்றார்.

பாமர மக்கள் ஒரே கோரிக்கையான மனுவை தொடர்ந்து கொடுத்துக் வருகின்றன.

பணம் செலவு செய்து, உடல் அலச்சல் ஏற்பட்டு வாரந்தோறும் வருவது பரிதாபமாக உள்ளது. அதிகாரிகள் எளிமைப்படுத்தி அவர்களுக்கு மனுவின் நிலையை அறிய உதவினால் நன்றாக இருக்கும்.

---

## உலக புகையிலை எதிர்ப்பு தினம் அனுசரிப்பு




புற்றுநோய் விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய டிஜிட்டல் இன்ஃபோகிராஃபிக் இணைய வழி புத்தகத்தை வெளியிட்டனர். ஸ்ரீ ராமகிருஷ்ணா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் டாக்டர் பி.குகன், கோவை மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் ஆர்.சுந்தர் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கார்த்திகேஷ் ஆகியோர்.

# Sambhavi: The Art of Sustainable Luxury in Handloom Fashion

**The Covai Mail**

In a world where fast fashion reigns supreme, Sambhavi, a high-end luxury fashion label helmed by the visionary designer Abinithi, emerges as a game-changer and is rewriting the rules of sustainable fashion with its unwavering commitment to ethics, craftsmanship, and sustainability.

With a resolute focus on women's ethnic wear and Indo-Western ensembles for special occasions, the brand takes immense pride in its bespoke, made-to-order garments, meticulously crafted with handloom textiles and natural fibres. Now, brace yourselves as Sambhavi prepares to launch the brand with a ground-breaking new collection that will revolutionize the silk market, proving that luxury and sustainability can indeed coexist harmoniously.

**The Epitome of Ethical Luxury:**

At the core of Sambhavi lies a profound philosophy that luxury begins with the very essence of its creations-the textiles themselves. While others merely assemble garments from various sources, this brand starts at the genesis of opulence by making the textile the foundation of luxury.

Each garment is an exquisite masterpiece, painstakingly handcrafted with seamless integration of handmade components into the fabric. This exceptional process involves the dedicated efforts of numerous skilled artisans, fostering rural development and championing environmentally-friendly practices.

The products of Sambhavi's creations have already been seen on celebrities like Gautam Menon. The handloom-based products that are also sustainable have caused a stir in the corporate and bureaucratic world. The products have been taken to many countries as insignia and mementos.

**A Sustainable Renaissance in Silk:**

The company's unwavering commitment to sustainability is evident in every facet of its operations. While many organic brands predominantly focus on cotton and linen, Sambhavi dares to venture into uncharted territory - the silk market.

With its upcoming collection, this brand seeks to redefine the silk industry, showcasing to the world that opulence can be achieved without compromising the planet's well-being. By introducing sustainable practices to the silk market, the brand aims to lead the charge and inspire other luxury brands to follow suit.

**Revolutionizing the Silk Treatment Processes:**

Sambhavi's vision for sustainable silk is brought to life through revolutionary treatment processes. In stark contrast to conventional methods, natural fibres such as ethically sourced silk, cotton, and linen are exclusively utilized here.

Drawing inspiration from the vibrant colours found in nature, this brand places a particular emphasis on naturally dyed silk, ensuring a harmonious union between elegance and environmental consciousness. Extensive research and development has enabled the replacement of harmful chemical-based treatments with eco-friendly alternatives.

The brand's commitment to innovation and sustainability means that each of its silk garments is free from toxic substances, contributing to a circular and waste-free production cycle. Even the leftover fabric finds new life in repurposed creations, leaving behind no trace of waste.

**Empowering Artisans: The Sambhavi Way:**

The brand's dedication to creating exceptional garments extends beyond aesthetics. It recognizes the profound impact artisans have on both their craft and their economic well-being. In a testament to their unwavering support, Sambhavi embraces a unique approach when it comes to samples or custom-made orders that may not meet desired expectations. Instead of returning these products, the brand continues to support artisans during the sampling process even if it means trials and errors for months.




*Abinithi, the visionary owner of Sambavi, exudes elegance as she proudly wears a captivating handloom dress of her own creation. Her attire reflects a seamless blend of artistry and style, symbolizing the brand's commitment to preserving cultural heritage while embracing contemporary fashion trends*

Amidst its relentless pursuit of eco-friendly excellence, the brand actively collaborates with self-help groups and government societies, establishing control and accountability within its supply chain. By purchasing from Sambhavi, consumers become ambassadors of change, contributing to the welfare of weavers and indirectly uplifting countless families who rely on handloom weaving for their sustenance. Together, we can champion sustainability and make a tangible difference in rural communities.

**Weaving a Sustainable Legacy:**

Sambhavi's future vision is rooted in a steadfast commitment to training more individuals and expanding collaborations with artisans across the nation. By nurturing a growing network of weavers, the brand aims to weave a sustainable legacy that transcends borders and time. It remains dedicated to its handloom roots and refuses to deviate from its sustainability principles, ensuring that the rich heritage of traditional crafts is not only preserved but celebrated.

As anticipation builds for the upcoming silk collection, the fashion world is abuzz with excitement. The brand's audacious venture into the silk market is set to challenge the status quo and inspire a wave of change. By infusing the luxurious allure of silk with sustainable practices, Sambhavi is poised to redefine what it means to be a luxury fashion brand in the 21st century.

**Igniting a Sustainable Revolution in the World of Luxury**

Sambhavi's impact extends beyond the realm of fashion. It stands as a catalyst for change, inspiring the industry as a whole to rethink its practices. By daring to challenge the norm and push boundaries, the brand paves the way for a more environmentally-friendly future-one where luxury and conscience intertwine seamlessly.

As the launch date draws near, the world is ready to witness the harmonious blend of luxury and sustainability, to embrace a new era where ethical fashion takes centre stage.

Are you tired of compromising between style and ethical choices? Sambhavi is here to break that barrier. Immerse yourself in a world where exquisite handloom cloths take centre stage, crafted with utmost care and attention to detail. Each garment tells a unique story of skilled artisans and their rich cultural heritage, meticulously woven into every thread.

For those seeking quality handloom clothing that aligns with their values, Sambhavi is your ultimate destination. You can connect on Instagram at **@sambhavi.co** to explore our exclusive collection, where traditional craftsmanship meets contemporary design. Get ready to elevate your style game with garments that not only make you look good but also feel good about your choices.

But that's not all - Sambhavi takes accessibility to the next level. Visit Sambhavi's website **http://www.sambhavi.co/** to indulge in a seamless shopping experience from the comfort of your home. Discover a world of sustainable fashion at your fingertips, where every purchase contributes to the larger mission of preserving our planet.

## VIMS Organized an Expert Talk

**The Covai Mail**

Vivekananda Institute of Management Studies (VIMS), Coimbatore, recently organized an Expert Talk on "Imbibing Entrepreneurial Culture". Valarmathi, Director - VIMS, delivered Felicitation Address and insisted everyone should learn the business and think about the way they can contribute to our nation.

Sargunan Neelamegam, Director, Blue Sky Hose Manufacturing India Pvt., Ltd was the Chief Guest. He addressed the students on "Emergence and Entrepreneurial Life of Blue Sky Hose Manufacturing" and insisted that they gain knowledge on marketing strategies which will help them to successfully run their business. Neelamegam discussed the ways to project the sale of a business and explained the sales activities of Blue Sky. He also suggested ideas on how to establish the startups.

To Advertise in THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

## PSG Hospitals Educate Villagers on Medical Emergencies

**The Covai Mail**

In a two-day community outreach program recently organized by PSG Superspeciality Hospitals, villagers in three villages were educated on Basic Life Support (BLS), Basic First Aid and common medical emergencies. Led by Dr Yamini Subramani, the Department of Emergency Medicine, emphasized the importance of timely BLS and seeking medical help for conditions like heart attacks and strokes. The program utilized theatre as a mode of delivery and received an enthusiastic response from the villagers. PSG Superspeciality Hospitals aims to empower the community with life-saving skills and knowledge, extending their commitment beyond the hospital walls.



*Basic life support training on emergency days at PSG hospitals*

## LMW-ATC Empowers ISRO's Space Missions

**The Covai Mail**

Lakshmi Machine Works - Advanced Technology Centre (ATC) has made significant contributions to ISRO's recent space missions. They manufactured composite sandwich panels and assembled the payload adapter for the GSLV-F12/NVS-01 mission. For the LVM3 One Web India-2 Mission, they produced a complex 4m Dia Hat stiffened composite structure and assembled 24 composite tubular members for the C25 Cryogenic Upper Stage.

Earlier, LMW also manufactured interstage assemblies and a piston cylinder assembly for ISRO's SSLV-D2 mission.

With world-class infrastructure and AS9100 D and NADCAP certifications, LMW-ATC serves as a one-stop shop for Aerospace & Defence customers. Their facility has undergone upgrades, incorporating cutting-edge equipment for quality assurance and efficient production.

## District Collector insisted KCT students prepare for IT Opportunities



*Balakrishnan, Police Commissioner of Coimbatore City, Kranti Kumar Pati, District Collector, and Prathap, Corporation Commissioner along with the officials participated in the Y20 brainstorming session*

**The Covai Mail**

Kumaraguru Institutions recently hosted the Young Indians (Yi) Coimbatore chapter for the Y20 brainstorming session, providing a platform for global youth to engage in consultative discussions under the G20 framework. The event focused on two key themes: "Future of Government - Reimagining Governance" and "Future of Entrepreneurship."

The panel discussion on "Future of Government - Reimagining Governance" saw the participation of esteemed figures including Balakrishnan, Police Commissioner of Coimbatore City, Kranti Kumar Pati, District Collector, and Prathap, Corporation Commissioner. Addressing the audience, the Collector emphasized Coimbatore's potential as an IT technology hub, highlighting the presence of IT parks and the recently announced Coimbatore Tech city project. He encouraged college students to prepare themselves for forthcoming opportunities in the field.

He specifically invited proposals from institutions like Kumaraguru that incorporate cutting-edge technologies and offer solutions to the city's challenges, such as solid waste management.

During the discussion, the City Police Commissioner shed light on the disruptive influence of technology in various government departments. He acknowledged the positive impact of artificial intelligence and drone technology, citing examples such as the use of AI-powered CCTV cameras to detect unusual activities. However, he also emphasized the rise of challenges related to security and cybercrimes, with over 50 cybercrime complaints received daily.

The panel members collectively acknowledged the transformative role of technology in governance. The District Collector highlighted the scientific approach to governance, improving day-to-day services through revolutionary technologies and enhanced welfare functions.

Incorporating public opinion emerged as an important aspect of participatory governance in the digital era, as noted by the Corporation Commissioner. Popular opinions and out-of-the-box ideas gathered from the public contribute to the decision-making process and help improve the system.

The Y20 brainstorming session provided an invaluable platform for exchanging ideas and discussing the future of government and entrepreneurship. The outcomes of the session will be documented and submitted to the Ministry of Youth Affairs, ensuring the youth's perspectives are considered in shaping policies and strategies for the nation's progress.


## TNAU gets design patent for Agricultural Implements

**The Covai Mail**

The Tamil Nadu Agricultural University (TNAU) has received a national patent for Dual purpose Agricultural implement.

This patent has been granted by the Office of the Controller General of Patents, Designs & Trademarks under the Union Commerce and industry ministry. The Dual-Purpose Agricultural Implement is designed for both weed management and earthing-up operation in garden land crops. This equipment includes ground wheel, blade, prong, main frame and smooth handle. There are two ground wheels for smooth movement of the machine. The working blade is at the bottom of the equipment. It serves for two purposes: (a) to cut the weeds and (b) it provides sliding action so that the root may not stick to the blade.

The Vice-Chancellor, TNAU, welcomed all the patent holders and distributed patent certificates to them in the presence of Senthil, Dean (SPGS), Raviraj, Dean (AEC&RI), Coimbatore, as well as Natarajan, Co-Ordinator (Patent Cell), Gopal, Professor and Er. Vanitha, Assistant Professor in the School of Post Graduate Studies.



*Geethalakshmi, Vice Chancellor and the dignitaries of TNAU holding the new certificate of national patent for dual-purpose agricultural implement*

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan